பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர் 10 ஆனி 30 றஜப் 26 இதழ் 153
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-7-77

இளைஞர்கள் விரும்பிப் படிப்பது "சாமிஜி" எழுதிய இரண்டாவது புத்தகம் "தேர்தல் கேள்விபதில்"

## வட்டு. மாநாட்டு வழக்கு: இளைஞர்கள் விடுதலை

சுழிபுரம், புதன்

தமிழர் கூட்டணி வட்டுக் கோட்டை மகாநாட்டின் போது நடந்த ஊர்வலம் தொடர்பாக பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்த 11 இளைஞர்களும் இன்று விடுதலை செய்யப் பட்டனர்.

இவர்கள் மீது பொலிஸ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாததால் வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை தொகுதியில் சென்ற ஆண்டு நடைபெற்ற தமிழர் கூட்டணி மாநாட்டு இறுதி நாள் அன்று அனுமதியின்றி நடைபெற்ற ஊர்வலத்தைப் பொலிசார் கலைத்ததுடன் பதினொரு இளைஞர்களையும் கைது செய்தனர். இவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று சங்கானை நீதிமன்றத்தில் எடுக்கப் பட்டபோது பொலிசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாததால் வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக நீதிபதி இளைஞர்களிடம் தெரிவித்

(7-ம் பக்கம் பார்க்க)

### தேர்தல் தினமான 21-ம் திகதி

# பழைய பூங்காவில் திரளும் மக்களை சமாளிக்க ஏற்பாடு

## தேர்தல் ஒழுங்குகள் யாவும் யாழ்: மாவட்டத்தில் பூர்த்தி

யாழ்ப்பாணம், வியா.

**தேர்தல் முடிவுகளை அறிவதற்கு இம்மாதம் 21-ம் திகதி இரவு யாழ். பழைய பூங்காவில், சுமார் ஒருலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் திரளுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.**

வாகனப் போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் பந்தோபஸ்து நடவடிக்கைகளைப் பொலிசார் கவனித்துவருகின்றார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 11 தேர்தல் தொகுதிகளுக்கான வாக்குகள் யாழ். அரசாங்க செயலகத்தில், எண்ணுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகிறது.

21-ம் திகதி மாலை 5 மணிக்கு சகல தொகுதிகளிலும் வாக்களிப்பு முடிவடைந்துவிடும். இரவு 8 மணிக்கு முன்னர் வாக்களிப்பு நிலையங்களிலிருந்து வாக்குப்பெட்டிகள் கச்சேரிக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாதம் 21ம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

பழைய பூங்காவில் அமைக்கப்படும் மேடையில் புதிய தேசிய அரசபேரவை உறுப்பினர் அறிமுகம் செய்துவைக்கப்படுவார்கள்.

### மதுபானக் கடைகள் மூடப்படும்

தேர்தலையொட்டி இம்மாதம் 19-ம் தேதி முதல் 22-ம் தேதிவரை, சகல மதுபானக் கடைகளும், கள்ளு, சாராயத் தவறணைகளும் மூடப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு தினங்களும் சீவப்படும் கள், விற்பனை செய்யமுடியாதென்றும், அக்கள் வீசப்படும் என்றும், யாழ். உதவி கலால் கமிஷனர் திரு. வி. சபாரத்தினம் தெரிவித்துள்ளார்.

இத்தினங்களில், கள் விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், பலத்த கண்காணிப்பு இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்நான்கு தினங்களும், வட பகுதியிலுள்ள சீவல் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா, என நமது நிருபர் கேட்டபோது, அதுபற்றி மேலிடத்திலிருந்து எவ்வித தகவலும் கிடைக்கவில்லையெனத் தெரிவித்தார்.

### அடையாள அட்டை கட்டாயமில்லை

வாக்களிப்பு நிலையங்களுக்கு அடையாள அட்டைகொண்டு செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என ஆட்களை பதிவுசெய்யும் அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

வாக்களிக்கதகுதியுள்ள பலருக்கு இன்னும் அடையாள அட்டை [illegible] வழங்கப்படவில்லையென்றும் அவர்தெரிவித்தார். அடையாள அட்டை வழங்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும் அவர் கூறினர்.

அடையாள அட்டை உள்ளவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அவற்றை எடுத்துச் சென்றால் ஏதாவது அடையாளம் பற்றிய பிரச்னை எழுந்தால் உடனடியாக அடையாள அட்டை மூலம் அப்பிரச்னைக்கு தீர்வுகாண உதவியாக இருக்குமென்றும் அவர்கூறினர்.

யாழ். அரசாங்க செயலகத்திலும் தேர்தல் தொடர்பாக அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ். அரசாங்கசெயலகத்தில் தபால் வாக்களிப்பு வேலைகள் நடைபெற்றன.

### வாக்காளர் அட்டை இல்லாமலும் வாக்களிக்கலாம்

யாழ்ப்பாணம், வியா

வாக்காளர் அட்டை இல்லாதவர்களும் தேர்தல் தினத்தன்று எவ்வித கஷ்டமுமின்றி வாக்களிக்கலாம்.

தபால்மூலம் கிடைத்த வாக்காளர் அட்டையை தவறவிட்டிருந்தால் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லும்போது அடையாள அட்டையைக் கொண்டுசெல்ல வேண்டும் அடையாள அட்டையைக் காட்டி வாக்குச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்

அடையாள அட்டை இல்லாதவர்களுக்கும் தேர்தல் அதிகாரி வாக்களிக்க அனுமதி வழங்கலாம்.

அடையாள அட்டையுடன் செல்பவர்கள் சுலபமாக வாக்குச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும்.

இறந்தவர்கள், வெளியிடங்களுக்குச் சென்றவர்களின் பெயர்கள் வாக்காளர் அட்டைகளில் இருந்தால், அதுபற்றி உடனடியாக அந்தந்தப் பகுதி தேர்தல் அதிகாரிக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

### மருத்துவ மாதர் பிரச்னை:

## வைத்தய அத்தியட்சகர் கொழும்பு செல்கிறார்

கொழும்பு, புதன்

யாழ். ஆஸ்பத்திரி மருத்துவ மாதர் வேலை நிறுத்தம் நாளை (வியாழன்) சுமுகமாகத் தீர்க்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பில் இன்று சுகாதாரப்பகுதி அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் அரசாங்க சுகாதாரப் பிரதிநிதிகள் எச். டி. பிரேமசேன, வி. பெருமாள் ஆகியோர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

இதைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். வியாழனன்று நடைபெறும் மாநாட்டில் சுமுகமான முடிவு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

இன்று பேச்சுவார்த்தைகள் நடந்ததால் அரசாங்கசுகாதார ஊழியர் சங்கம் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தம் பின்போடப்பட்டுள்ளது.

## யாழ். நகர் காணுத மாணவர் கூட்டம்!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் முற்றவெளி கோட்டை மைதானத்தில் நேற்று மாலை தமிழ்மாணவர்கள் நடத்திய எழுச்சிக்கூட்டத்திற்கு ஒரு மாணவனே தலைமைவகித்தார். இக்கூட்டத்தில் பேசியவர்கள் அனைவரும் மாணவ, மாணவியர்கள் தான்.

அரசியல் தலைவர்கள் எவரும் இக்கூட்டத்தில் பேச்சாளராகக் கலந்து கொள்ளவில்லை. அவர்களைப் பேச்சாளர்களாக மாணவர்கள் அழைக்கவும் இல்லை. ஆனாலும் கோட்டை மைதானம் ஜனக்கூட்டத்தினால் நிரம்பிவழிந்தது. மைதானம் நிரம்பிவீதிகளிலும் ஜனக்கூட்டம் கூட்டம்முடியும்வரை நின்றது.

தரப்படுத்தலால் ஏற்பட்ட பாதிப்புப்பற்றி எடுத்துக்கூறிய பேச்சாளர்கள் எதிர்காலச் சந்

[7-ம் பக்கம் பார்க்க]

## கதிர்காம உற்சவம் ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பு, புதன்

எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகும் கதிர்காமம் வருடாந்த உற்சவத்தையொட்டி யாத்திரிகர்களுக்கான வசதிகள் யாவும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன.

சந்தைப்படுத்தும் திணைக்களமும், கூட்டுறவுச் சங்கங்களும் பொருட்கள் விநியோகத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

இ.போ.ச.வும் யாத்திரிகர்களின் நலன்கருதி விசேட பஸ்சேவைகளை ஏற்பாடு செய்துள்ளது.

(உ)

### எருமைத் திருடர்கள்

ஹபரணை, புதன்

ஹபரணைப்பொலிசார் லொறியொன்றைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது அதில் 9 எருமைகள் காணப்பட்டன.

இவை திருடப்பட்ட எருமைகள் எனபொலிசார் கருதுகின்றனர்.

(உ)

## பரு. பஸ் ஊழியர் வேலைநிறுத்தம் நீடிக்கிறது

புலோலி, புதன்

பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர் வேலைநிறுத்தம் தொடர்கிறது.

இன்று நடைபெற்ற சமரச முயற்சிகளும் பயனளிக்கவில்லை இ. போ. ச. அதிகாரிகள் நாகரத்தினம், பாலேந்திரா மற்றும் 3 தொழிற்சங்கங்களின் ஏகபிரதிநிதி ம. சுப்பிரமணியம்ஆகியோர்கலந்துகொண்ட சமரச மாநாடு பயனளிக்கவில்லை. எந்தக்காரணம்கொண்டும் 'சப்பல்'ரக பஸ்களை செலுத்தப்போவதில்லையென்று வேலைநிறுத்தக்காரர்கள் கண்டிப்பாக மறுத்துவிட்டதாகத்தெரிகிறது. மாத இறுதிக்குள் 10 லேலன்ட் பஸ்களையும் பிறகு மேலும் பல பஸ்களையும் பெற்றுத்தர இ. போ. ச. அதிகாரிகள் முயற்சி எடுப்பதாகக் கூறியதாகத்தெரிகிறது.

இதேசமயம் வேலைநிறுத்தத்துக்கான காரணங்களை விளக்கி வேலைநிறுத்தம் செய்வோர் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

### பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-1977 ல் ஆரம்பமாகவுள்ளது. நிச்சயமான வேலைவாய்ப்பைத் தரக்கூடிய விதத்தில் பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பல வழிகளில் பயனடைவீர்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். அதிபர், இன்ஸ்டிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B ஸ்ரான்லி வீதி, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 6635

### விற்பனைக்கு

ஈழத்தமிழர் இறைமைட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் தமிழ்த் தலைவர்கட்கெதிரான தேசத்துரோகக் குற்றச்சாட்டு வழக்கில் அமரர் மு. திருச்செல்வம் கியூ சி. ஆற்றிய வழக்குரை வாதக்கருத்துக்களின் தொகுப்பு: விலை 4-25 தொகையாக வாங்குவோர்க்குத் தகுந்த கழிவு உண்டு. ஸ்ரீ காந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6649

### லிகிதர் தேவை

சைவபரிபாலன சபையாரின் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலைக்கு கணக்கு வைப்புமுறை தெரிந்த லிகிதர் ஒருவர் தேவை. தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். தராதரங்களைக் குறித்து 22-7-77க்கு முன் காரியதரிசி, சைவபரிபாலன சபை, 450, K. K. S. வீதி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

க சிற்றம்பலம்,
கௌரவ காரியதரிசி.

6647


# ஆசிரியசங்க நடவடிக்கை பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

யாழ். கல்வித் திணைக்களம் குறிப்பிட்ட சில விஷயங்களில் கடமை பூர்வமாக இயங்காததன் காரணமாக தாம் படிப்படியாகமேற்கொள்வதாகத் தீர்மானித்திருந்த பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம், சட்டப்படி வேலை, அடையாள வேலைநிறுத்தம், வேலைநிறுத்தம் போன்றவை நாட்டில் நிலவும் சில சூழ்நிலை காரணமாக சில வாரங்களுக்குப் பின்போடப்பட்டுள்ளதாக இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தமது கோரிக்கைகளுக்குப் பலன் கிட்டும் வரையும் போராடுவதற்குத் தயார் செய்யுமாறு இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கம் அந்த அறிக்கையில் சகல ஆசிரியர்களையும் கோரியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சம்பள மாற்றுத் திட்டத்தால் உரிமையுடைய சகல ஆசிரியர்களுக்கும் பாக்கிப் பணம் வழங்கப்பட்டுவிட்டதா? எல். பி. த. சில்வா சம்பளச் சிரமைப்பால் உரிமை உடையோருக்கு அதன் பெறுபேறு கிட்டி உள்ளதா? கடன்சபை சரிவரத் தொழில்படுகின்றதா? பட்டதாரி நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்களுக்குரிய சம்பளத்தை வழங்க முயற்சி எடுக்கப்பட்டதா? சகல ஆசிரியர்களதும் சுயவிபரக் கோவை சரிவர உள்ளதா? பின்தங்கிய கிராமப்புறப்பாடசாலைகளுக்குப் போதிய ஆசிரியர்கள் அனுப்பப்பட்டனரா? பின்தங்கிய இடங்களுக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு எவ்வாறு இவ்வருட ஆரம்பத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டது? இடமாற்றங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன? ஆசிரிய ஆலோசனைச் சபை இயங்குகின்றதா? என்பனபோன்ற கேள்விகள் அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

"ஆசிரியர்களுக்கு உரித்தான சகல பாக்கிப்பணங்களையும் வழங்குமாறும், கடன் சபை இயங்குவதிலுள்ள தடைகளை நீக்குமாறும் சேவையின்போது பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும் பட்டதாரிகளாக ஆசிரிய சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டோருக்கும் பட்டதாரிச் சம்பளம் வழங்குமாறும், இடமாற்றங்களில் அரசியல் தலையீட்டை நீக்கி ஆசிரிய நிறுவனங்களுக்கு முதன்மை கொடுக்கும்படியும் பாடப்புத்தகங்களின் விலைகளை குறைக்குமாறும், பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமித்து பின் ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் பிரகாரம் இடமாற்றம் அளிக்கவேண்டும் எனவும் பாடக்குறிப்புக் கொப்பி, லீவு விண்ணப்பங்களை வழங்குமாறும், பலமுறை தொழிற் சங்கங்கள் மூலமாகவும் ஆசிரிய சம்மேளனம் மூலமாகவும் கோரிக்கைகள் விடுத்து கல்வி அமைச்சின் சிரேஷ்ட நிர்வாகிகளுடனும் பிராந்திய கல்விப் பணிப்பாளருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் எதுவித பலனும் ஏற்படாதது குறித்து இச்சபை கவலை தெரிவித்துள்ளது.

இன்றைய அரசு பல விஷயங்களில் முன்னைய அரசுகளைக் காட்டிலும் பாரிய நன்மைகளை அளித்துள்ளபோதிலும் மேற்குறிக்கப்பட்ட கோரிக்கைகள் பிரதேச மட்டத்தில் செயல்படுத்த முடியாததையிட்டு ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்துள்ளார்களென்றும் பிரதேச ரீதியில் செயல்படுத்தக்கூடிய கோரிக்கைகள் சம்பந்தமாக கல்வி அமைச்சு பணிப்புகளை விடுத்துள்ளபோதிலும் பிரதேச கல்வித் திணைக்களங்கள் சரிவரச் செயல்படாததன் விளைவாக ஆசிரியர்கள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சபை கவலை தெரிவித்துள்ளது. (கூ-அ)

# உடற்பயிற்சிதரும் நன்மை'

அரியாலை, புதன்

"ஒருகல்லூரி சிறந்துவிளங்க வேண்டுமானால் அக் கல்லூரியில் கல்விகற்கும் மாணவ மாணவியர் கல்வித்துறையிலும் விளையாட்டுத் துறையிலும் ஏககாலத்தில் முன்னேற்றம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்" என்று உடற்பயிற்சிக் கல்வியதிகாரி திரு.வி. தங்கராசா கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. அரியரத்தினம் போட்டிகளுக்குத் தலைமை வகித்தார். திரு தங்கராசா தொடர்ந்து பேசுகையில் "இளமைப்பருவத்தில் விளையாட்டுத் துறையில் ஆர்வம் மிக்கவர்களாகஇருப்பின் உடல் வலிமை பெற்று முதுமைப் பருவத்திலும் திடகாத்திரமான உடலமைப்புக்கொண்டவர்களாக வாழமுடியும்" என்றார்.

திருமதி தங்கராசா பரிசில்களை வழங்கினார். (உ)

### பட்டப்பகலில்

# பெண்ணைக்கொன்று பொருள்கள் கொள்ளை

தொம்பே, புதன்

ஹேமலதா என்ற பெண் கொலை செய்யப்பட்டு, அவரது வீட்டில் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொம்பேயில் நடைபெற்றுள்ளது.

வாசலில் கிடந்த இவரது சடலத்தின் தலைப்பாகம் திரைச் சேலையால் கட்டப்பட்டிருந்தது.

பகல் 10 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் இக்கொலையும் கொள்ளையும் நடந்திருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

மர்மக் கொலைஞரைத் தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர். (உ)

# 'வேட்பாளர் நியமிக்காததால் தமிழ்க்காங்கிரஸ் அழிகிறது'

— குமார் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், வியா.

'தேர்தல் சட்டம் 28ன்படி தேர்தலில்போட்டியிடாத கட்சிபதவி இழந்துவிடும். இந்த் தேர்தலின் பின்பு தமிழரசுக் கட்சி நிலைத்து நிற்கும். ஆனால் தமிழ்க்காங்கிரஸ் கட்சி அழிந்துவிடும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை திரு. மு. சிவசிதம்பரம்குழிதோண்டிப் புதைத்துவிட்டார். தமிழ்க்காங்கிரஸ் கட்சி அழிந்துவிடக்கூடாது என திரு சிவசிதம்பரம் விரும்பியிருந்தால், தமிழரசுக்கட்சி ஒரு வேட்பாளரை மட்டக்களப்பில நியமித்தது போல தமிழ்க்காங்கிரஸ் சார்பில் ஒருவராவது போட்டியிடுவதற்கு திரு. சிவசிதம்பரம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்."

இவ்வாறு திரு. குமார் பொன்னம்பலம் கன்னாதிட்டிச் சந்தியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார். தமிழ்க் காங்கிரசுக்கு அண்மைக்காலத்தில் தலைவராக வந்த ஒருவர் கட்சியை இப்படி அழியவிட்டது கட்சி ஆதரவாளர் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக திரு. குமார் சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கையைப்போலவே தான் பல்வேறு சமுதாயங்கள் உள்ளது நைஜீரிய தேசம். ஈபோஸ், யுரபான். ஹைன்ஸ் ஆகிய இனங்கள் வாழ்ந்த அந்நாட்டில் யுரபான் இனம் மற்றவர்களோடு சேர்ந்துவாழ் முடியாது எனச்சொல்லி தன்னாட்சிப்பிரகடனம் செய்தது. பிரித்தானியாவிலிருந்து பிரிந்து இயன்சிமித் தன்னாட்சிப் பிரகடனம் செய்தார். இதை ஏன் நான் சொல்கின்றேன் என்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உண்மையிலேயே தனிநாடு கோரிக்கையை விரும்பவில்லை. எமது கட்சியின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வேண்டுகோள் ஒன்று விடுக்க விரும்புகின்றேன். ஆட்சி மன்றம் செல்லும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அங்கே வட்டமேசை மாநாடொன்று நடத்த முயலவேண்டும். அதனால் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது என்றால் பின் வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தேர்தலின் பின்

[8-ம் பக்கம் பார்க்க]

### பஸ்மோதி மரணமான

# இளைஞன் இன்னும் அடையாளம்காணபடவில்லை

யாழ்ப்பாணம், வியா

கடந்த சனிக்கிழமை இரவு பஸ்மோதி மரணமான இளைஞரின் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. இவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் சம்பந்தமாக விசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் அடையாளம் கண்டபின்பு தொடர்ந்து விசாரணை நடாத்தப்படும் என்று கூறினார்.

இவ்விசாரணையின் போது கண்டக்டர் விஞசித்தம்பி ராமசாமியும் வேறுஒருவரும் சாட்சியமளித்தனர்.

மேற்படி பஸ்சாரதி சி. சிவசுப்பிரமணியம் ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு; மீண்டும் யாழ். பொலிஸ் கோர்ட்டிற்கு வருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. [கு]

## மாணவர் வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் இடையே நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் 0-3 கோல்களால் மாணவர்கள் வெற்றிபெற்றனர்.

ஆசிரியைகளுக்கும், மாணவிகளுக்கும் இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் மாணவிகள் வென்றனர். (உ)

## இன்று விபுலானந்தர் படம் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், வியா.

சுவாமி விபுலானந்தர் உருவப்படம், யாழ். வளாக நூலக தென்னாசியவியல் அறையில் பேராசிரியர் க. கைலாசபதியினால், இன்று பிற்பகல் 3 மணிக்கு திரைநீக்கம்செய்துவைக்கப்படும்.

சுவாமி விபுலானந்தர் எழுதிய நூல்களும், அவர் பற்றி எழுதப்பட்ட நூல்களும் காட்சிக்கு வைக்கப்படும். சுவாமி பற்றியகட்டுரை 4ம் பக்கத்தில் வெளியாகிறது. (க)

## நியமனம்

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக வடபிராந்திய கூட்டுறவுச் சம்மேளனத் தலைவரும், மாதகலைச் சேர்ந்தவருமான திரு. எஸ். கந்தையா கூட்டுறவு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

வேலணை, புதன்

வேலணை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தின் புதிய தலைவராக, வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு சுப்பிரமணியம் நிதி, நிர்வாக, சிறுகைத்தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

### கொழும்பில்

# சென். தோமஸுடன் ஹென். ஜோன்ஸ் மோதும்

அரியாலை, புதன்

வடமாகாணக் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற 14 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ். பரியோவான் கல்லூரிக்கோஷ்டி முதல்தரமான கோஷ்டியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மேல்மாகாணத்தில் முதல்தரமானகோஷ்டியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் கொழும்பு சென்ற். தோமஸ்கல்லூரிக் கோஷ்டியுடன் இம்மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை கொழும்பு சென்ற். தோமஸ் கல்லூரி மைதானத்தில் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி போட்டியிடவிருக்கிறது.

செல்வன் ரி. எஸ். வரதன் தலைமை தாங்கும் பரி. யோவான் கல்லூரிக்கோஷ்டியில் செல்வன்கள் பி. டி. சி. சின்னையா, ஏ. ரி, ஜீவானந்தம், ஜே. எம். ஜோசெப், ஏ. பி, விஷயராசா. எஸ். விக்கினபாலன், எஸ். பி. நிர்மலன், ஆர். பி. விஷயராசா, எஸ். அழகன்ராஜ், கே. பாஸ்கரன், ஏ. சி. தேவப்பிரியா, சிறிதர் அமரநாத், ஏ. சத்தியஜித், வி. துஷ்யந்தன், எஸ். சந்திரகுமார் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (அ)


# திருமண நன்றி நவிலல்

## சுந்தரலிங்கம் — சாரதா

இருவரும் தங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து தங்கள் திருமண வைபவத்திற்கு வருகை தந்தும், அன்பளிப்புகள் வழங்கியும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் சிறப்பித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தங்கள் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர். தனித்தனியாக நன்றி கூற முடியாமைக்கு வருந்துகின்றனர்.

12, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

6648

# "காஞ்சியில் நீதிதேவன் மயக்கம்"

## சர்க்காரியா நீதிபதி சுகவீனம் குறித்து கருணாநிதி உடன்பிறப்புக்கு கடிதம்

சென்னை, ஜூலை. 13

பேரறிஞர் அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்" என்னும் பிரபல்யமான நாடகம் காஞ்சியில் மீண்டும் மேடையேற்றப் படவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியிடம் கழகத்தவர் கோரியுள்ளனர்.

இதற்கிடையில் காஞ்சியில், கலைஞர் உட்பட முன்னாள் தமிழ்நாடு மந்திரிகள் சிலர் மீதான ஊழல் புகார்கள்பற்றி விசாரணை நடத்திவரும் சர்க்காரியா கமிஷன் நீதிபதிக்கு சுகவீனம் ஏற்பட்டதால் விசாரணை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த இரு சம்பவங்களையும் தொடர்புபடுத்தக் கூடியவகையில் தி. மு க. நாளேடான 'முரசொலி'யில் கலைஞர் 'உடன்பிறப்பு'க்குஎழுதியுள்ள கடிதத்தில குறிப்பிட்டுள்ளார்.

கலைஞர் உடன்பிறப்புக்கான கடிதத்தில்கூறியிருப்பதாவது: "இனஉணர்வைவீழ்த்துவதற்காகத்தான் தமிழர்தலைவனும் தென்னிலங்கை வேந்தன் இராவணன் மீது களங்கம் சுமத்தி அழித்திட முனைந்தார்கள்.

அதற்குத் தமிழ்க்கவி வேந்தர் கம்பரும் துணை போனார் என்பதே நமது அண்ணாவின் குற்றச்சாட்டு.

தன் மீது சுமத்தப்பட்டபழியைத் தீர்த்துக்கொள்ள, அண்ணா உருவாக்கிய இராவணன், நீதிதேவனுக்கு முன்னால் கம்பரையும் மற்றும்புராணீகர்களால் தயாரிக்கப்பட்ட சாட்சிகளையும் குறுக்குவிசாரணை செய்கின்றான்.

நீதிதேவனுக்குஉண்மைதெரிகிறது.

சாட்சியங்கூற வந்தோர் தான் குற்றவாளிகள்என்பதும் புரிகிறது.

ஆனாலும் தெளிவான–துணிவான தீர்ப்பு எழுதும்தூய்மையான கை அந்தநீதிதேவனுக்கு இல்லை.

குறுக்குவிசாரணையால் அவதூறுக்கோட்டை தகர்ந்தது.

நீதிதேவன் நீதிவழங்கமுடியாது மயங்கிச் சாய்கின்றான்

இத்தகைய நீதிதேவனிடம் நீதியை எப்படி மக்கள் எதிர்பார்க்கமுடியும் எனக் கூறிக்கொண்டு மக்கள்மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

தம் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என சர்க்காரியா கமிஷன்நீதிபதிக்கு இப்போது புரிகிறது என்ற கருத்துப்பட கலைஞர் இக்கடிதத்தை வரைந்துள்ளார். (கி–உ)

---

அணு ஆயுத பரிசோதனைத் தடை:

## பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆலோசனை

லண்டன், ஜூலை 13

அணு ஆயுத பரிசோதனைகளை முற்றாகத் தடைசெய்வது தொடர்பாக பிரிட்டன், அமெரிக்கா, சோவியத்யூனியன் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து ஆலோசனை நடத்தவிருக்கின்றன.

ஜெனிவாவில் இந்நாடுகள் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தவிருக்கின்றன.

14 வருடங்களாக தடைப்பட்டிருந்த இப்பேச்சு வார்த்தைகள் இப்போது நடைபெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பது உலகநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது என்று செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

---

### ஆலோசனை

லண்டன், ஜூலை. 13

தென்னாபிரிக்கா தனது நிறவேறுபாட்டு நடவடிக்கைகளை நிறுத்தாத பட்சத்தில் அந்நாட்டிற்கான அரசியல் பொருளாதாரத்தடையை எவ்வாறு அமுல்நடத்துவது என்பது குறித்துஐரோப்பியபொதுச்சந்தை நாடுகள் ஆலோசித்து வருகின்றன. [உ]

---

## பிரிட்டனின் யோசனைக்கு வெள்ளையர் அரசு எதிர்ப்பு

நைரோபி, ஜூலை. 13

ருடீஷியாவில் பெரும்பான்மை இனத்தவரது ஆட்சி உருவாகு முன் ஆட்சிப் பொறுப்பு பிரிட்டனிடம் இருக்கவேண்டும் என்ற பிரிட்டனின் யோசனையை ருடீஷிய வெள்ளையர் அரசு எதிர்த்துள்ளது. பிரிட்டனின் இந்த யோசனை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல என்று ருடீஷிய வெள்ளையர் அரசு தெரிவித்தது.

இதேவேளை ருடீஷியப் பிரச்னை சுமுகமாகத் தீர்த்து வைப்பதில் தமது தேசிய முன்னணியின் பங்கு குறித்து முன்னணியின் தலைவரான என்கோமா கருத்து வெளியிட்டுள்ளார். (உ)

---

## ஐ. நா. வில் அங்கத்துவம் கோரி வியட்நாம் மீண்டும் விண்ணப்பம்

ஹனோய், ஜூலை. 13

வியட்நாம் அரசாங்கம் ஐக்கியநாடுகள் சபையில் தன்னையும் ஒரு அங்கத்துவநாடாக சேர்த்துக் கொள்ளுமாறு மீண்டும் விண்ணப்பித்துள்ளது.

இவ்விண்ணப்பத்தை வியட்நாம் அரசாங்கம் ஐ. நா. பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்முக்கு அனுப்பி வைத்துள்ளது. (உ)

---

### ராஜன் பிரசாரம்

மட்டக்களப்பு, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகரும் முன்னாள் எம். பியுமான திரு. பி. இராஜன் செல்வநாயகம் தனது தேர்தல் பிரசாரத்தை செய்வதற்கு உத்தியொன்றை கையாண்டுள்ளார். அரசியல் அதிகாரியாகவிருந்த காலத்தில் தான் செய்த சேவைகளை பிரசுர வடிவில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமது முயற்சியினால் நடைபெற்று முடிந்த கட்டிட நிர்மாணங்களையும், நிர்மாணிக்கப்பட்டு வரும் வேலைகளையும் புகைப்படமெடுத்து பிரசுரத்தில் வெளியிட்டு ஆதரவு திரட்டி வருகிறார். (உ)

---

### மதுபோதையில் ஜீவனைப் போக்கினார்

யாழ்ப்பாணம், வியா

மதுபோதையினால் நச்சுத்திராவகம்அருந்திய குடும்பஸ்தர் ஒருவர் தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் ஒன்று புன்னாலைக்கட்டுவன் தெற்கில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது: சுப்பிரமணியம், என்னும் மேற்படி நபர்மூன்று பிள்ளைகளுக்குத்தந்தையாவார் இவர் தினமும் மது அருந்தும் பழக்கமுடையவராம். சம்பவம் நடைபெற்றதினம் மது போதையில் இறைச்சியுடன் வீட்டிற்குவந்து மனைவியிடம் சமைக்கும்படி கூறிவிட்டு மீண்டும் மதுவருந்தச் சென்றாராம்

வரும் வழியில் மச்சான் முறையான தேவபாலன் என்பவர் சந்தித்தபோது அப்போது தான் மருந்து குடித்துவிட்டதாகக் கூறி மயக்கம் போட்டு விழுந்தாராம்.

இம்மரணம் சம்பந்தமாக விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ் பிரான்சிஸ் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். (கு–உ)

---

## 'கூட்டுறவுச் சங்கங்கள் திருடர்களின் குகைகள்' -- ஜே. ஆர்.

கொழும்பு, புதன்

"ப.நோ.கூ.சங்கங்கள்பற்றி எனக்குப் பல புகார்கள் கிடைத்துள்ளன. ப. நோ. கூ. சங்கங்கள் திருடர்களின் குகைகளாகவே விளங்குகின்றன."

குண்டசாலையில் நடந்ததேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஐ. தே. கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேலும் கூறியதாவது: ப. நோ. கூ. சங்கத்தலைவர்களாகவிருந்த எம். பிக்களை ராஜினாமா செய்யுமாறு கூட்டுறவு அமைச்சர் கோரியிருந்தார். ஆனால் பலர் அதற்கு மறுத்துவிட்டார்கள். அப்படியான எம்பிக்களில்ஒருவர் ப. நோ.கூ. சங்கங்களிலிருந்து 50,000 யார் துணிகளை 4 ரூபா 50 சதம் வீதம் கொள்முதல் செய்து யார் 8 ரூபா 50 சதத்திற்கு விற்பனைசெய்திருக்கிறார். இதன் மூலம் 40,00,00 ரூபா லாபமாகப் பெற்றுள்ளார்.

"நான் 80 தொகுதிகளுக்கு இதுவரை சென்றுள்ளேன். அங்கு பெருந்திரளான மக்களைப் பார்த்தேன். எல்லோரும் பச்சை நிறத்தில் காணப்பட்டார்கள். இது அரசாங்கத்தின் அரசியல் வங்குரோத்தையே எடுத்துக்காட்டுகிறது.

"இன்று சுதந்திரக்கட்சி நண்பர்கள் கூட, ஐக்கிய தேசியக்கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் என்று கூறுகிறார்கள்".

---

### ஆணையாளருக்கு கட்டாயலீவு

கொழும்பு, புதன்

தேசிய வீடமைப்புத் திணைக்கள ஆணையாளர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார்

அமைச்சு இவ்வுத்தரவைப் பிறப்பித்தது. (உ)

---

### 'விடுதலைபெற அர்த்தமற்றவாதம் உதவாது'

மட்டுவில், புதன்

"தமிழினம் விடிவுபெற வேண்டுமாயின் தமிழர் விடுதலைக் கூட்டணியை முழுமனதுடன் ஆதரிக்கவேண்டும். அர்த்தமற்ற பிரசாரங்கள் பயன் தரப் போவதில்லை" என்று திரு. வண்ணை ஆனந்தன் மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் சாவகச்சேரி தொகுதி த. வி. கூட்டணி வேட்பாளர் திரு. வி. என். நவரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

---

'சோஷலிசக்கொள்கையை

## அமுல் நடத்த ஜே. ஆருக்கு 700 வருடங்கள் பிடிக்கும்'

உடுகம, புதன்

"ஐக்கியதேசியக் கட்சித்தலைவர் திரு, ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு சோஷலிச கொள்கையை அமுல் நடத்த 700 வருடங்கள் பிடிக்கும். ஏனெனில் சோஷலிசத்தின், பெறுமதியையும், முக்கியத்துவத்தையும் உணருவதற்கு அவருக்கு 40 வருடங்கள் பிடித்துள்ளது."

பத்தேகம தொகுதியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய டாக்டர் லோ. பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

இடதுசாரி ஐக்கியமுன்னணி அபேட்சகர் அ. பியதாசா ரத்தினபாலாவை ஆதரித்து நடந்த கூட்டத்தில் டாக்டர் பொன்சேகா மேலும் கூறியதாவது: "இடதுசாரி இயக்கம் இந்நாட்டில் டாக்டர் விக்கிரமசிங்கா, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்த்தனா போன்றவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. இவர்கள் எல்லோரும் இன்று இடதுசாரி ஐக்கிய முன்னணியில் இருக்கின்றனர்.

"உறவினர்களுக்குமுக்கிய பதவிகள் கொடுத்துள்ளதாக ஐ. தே. கட்சியினர் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைக் குறைசொல்லக் கூடாது. ஐ. தே. கட்சியினர் ஆட்சியிலிருந்தபோதும், அவர்கள் தங்கள் உறவினர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கினார்கள்."

---

### ஆகஸ்ட 31-ல கால்கோள் விழா

யாழ்ப்பாணம், வியா.

கல்வி கலை பண்பாட்டுக் கழகக் கட்டிடத்திற்கான அடிக்கல்நாட்டு விழாவை அடுத்தமாதம் 31-ம் திகதி வில்லூன்றியிலுள்ள நிலத்தில் நடத்துவதென்று கழக ஆட்சிக் குழுக் கூட்டத்தில முடிவுசெய்யப்பட்டது.

நல்லை ஞானசம்பந்தர் ஆலயத்தில் கழகத் தலைவர் சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கழகக் கட்டிடத்தை திராவிட கலாசார அமைப்பில் கட்டுவதென்றும் கால்கோள் விழாவின் போது நாட்டின் பல பெரியார்களதும் ஆசிகளைக்கொண்ட விசேஷ மலர் ஒன்றை வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மலருக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட குழுவினர் விபரம் வருமாறு:–

தலைவர்: சட்டத்தரணி த. சோமசுந்தரம். துணைத் தலைவர்கள்: திரு. ஆ. துரைராஜசிங்கம். சட்டத்தரணி வை. ச. செந்தில்நாதன், பொதுச்செயலாளர்: ஓவியர் ச பெனடிக்ற், பொருளாளர்: சட்டத்தரணி சுகை. கேசவன் உறுப்பினர்கள்: கிராமசேவகர் திரு தா. சிவபாதசுந்தரம், திருவாளர்கள் வ. இளையதம்பி, சு. பரநிருபசிங்கம், அ, செல்லத்துரை, மு. செல்வராஜா, வண்ணை சே. சிவராசா. (அ)

---

நீர், மின் பற்றாக்குறை நீங்க

## "தமிழ்நாடு, ஆந்திர, கேரள, கர்னாடக மாநிலங்கள் சேர்ந்து செயற்படவேண்டும்"

### சட்டமேலவையில் காங்கிரஸ் உறுப்பினர் கோரிக்கை

சென்னை, ஜூலை 13

"தமிழ்நாடு. கேரளம், ஆந்திரா, கர்னாடகம் ஆகிய மாநிலங்கள் நீர்வளம், மின்சாரத்துறை ஆகியவற்றில் ஒன்று சேர்ந்து செயற்படுவதன் மூலம் நீர், மின் பற்றாக்குறையை போக்கடிக்க முடியும்" என்று நேற்று தமிழ்நாடு சட்டமேலவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சுந்தர தேவர் வேண்டுகோள் விடுத்தார்.

"ஆந்திர மாநிலத்தில் வீணாகும் தண்ணீரை தமிழ் நாடு பெறுவதற்குரிய பேச்சுவார்த்தைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளவேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு.கே.எஸ்.மணி பேசுகையில்," காவிரி நீர் தொடர்பாக தாமதமற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மக்கள் இதனால் பெரும் தொல்லைகள் அனுபவித்து வருகின்றனர் என்றும்" தெரிவித்தார். நடப்பாண்டில் இதுபற்றிய உறுதியான நிலை ஏற்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழரசுக்கழக உறுப்பினர் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பேசுகையில், 'தமிழ்நாடு அரசு சகல துறைகளிலும் தமிழே ஆட்சிமொழி என்பதை உறுதிப்படுத்தும் திகதியை அறிவிக்கவேண்டும்" என்றுகேட்டுக்கொண்டார்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர் குடும்பங்களுக்கு மீண்டும் பென்ஷன் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கைவிடுத்தார். [உ]

### மணிவசக்கு

அகிம்சை பெருந்தொகையான மனிதருடைய நன்மைக்கென்று தொழிற்படுவதில்லை. அது எல்லாருடைய நன்மைக்குமாகத் தொழிற்படுகிறது. அகிம்சையை விரதமாய்க் கொண்ட ஒருவன், எல்லாருடைய நன்மையையும் பெறுவதற்குத் தேவை வரும்போது தன்னுடைய உயிரையும் விடுவதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

—காந்தி மகான்


# ஈழநாடு
# THE EELANAADU


## தேர்தல்கள்

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பொதுத்தேர்தல் நடந்துள்ளன. இலங்கையில் இன்னும் சில நாட்களில் நடைபெற இருக்கின்றது.

இந்தியாவில் தேர்தல்கள் அமைதியாக நடந்துள்ளன. வாக்குப்பெட்டி மூலம்அமைதியான புரட்சி ஏற்பட்டு, புதிய ஜனதா அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. புதிய ஜனாதிபதியாக திரு. என் சஞ்சீவரெட்டிபோட்டி இன்றி தெரிவு செய்யப்படவுள்ளார்

பாகிஸ்தானில் தேர்தல் நடைபெற்று பூட்டோவின் கட்சியினர் வெற்றிபெற்றனரென்றாலும், தேர்தல்கள் ஒழுங்காக நடக்கவில்லை என்று எதிர்க்கட்சிகள் பலத்த கிளர்ச்சிசெய்து, 300 பேர்களுக்குமேல் கொல்லப்பட்டனர். நாடெங்கும் வன்முறை கிளர்ச்சிகள் நடந்தன. மறு தேர்தலை நடத்துவதாக பூட்டோ ஒப்புக்கொண்டார். என்றாலும் இருதரப்பினருக்கும் உடன்பாடு ஏற்படவில்லை.

நெருக்கடியும் வன்செயல்களும் அதிகரித்தன. மக்கள் அமைதியாக வாழமுடியவில்லை இனி என்ன நடக்குமோ என்று மக்கள் தவித்துக்கொண்டிருக்கையில், இராணுவம் தலையிட்டது. இருதரப்பு அரசியல் தலைவர்களையும் கைது செய்து சிறைப்படுத்தி, இராணுவ ஆட்சியை ஏற்படுத்தியதால் வன்முறைகள் அடங்கி மக்களும் தற்காலிகமாக இதை வரவேற்றனர். வருகிற அக்டோபர் மாதம் தேர்தல் முன் ஏற்பாட்டின்படி நடைபெறுமென்று இராணுவ ஆட்சியினர் அறிவித்துள்ளனர்: எதிர்க் கட்சியினர் இதை வரவேற்றுள்ளரெனினும் பூட்டோ ஒத்துழைப்பாரா என்பதுதெரியவில்லை. மக்கள் பிரதிநிதிகளடங்கிய ஜனநாயக ஆட்சி ஏற்பட வேண்டுமென்பதே தங்கள் நோக்கம் என்று இராணுவ ஆட்சியினர் தெரிவித்து; பல கட்சியினரின் ஒத்துழைப்பையும் நாடியுள்ளனர். எதிர்காலத்தில் என்ன நடக்குமென்பது இனித்தான் தெரியவேண்டும்.

நம் இலங்கையிலே அடுத்த வாரம் தேர்தல் நடைபெற இருக்கின்றது. இங்கு தேர்தல் அமைதியாக நடைபெறுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல் போட்டிகள் பலமாக உள்ளன.

என்றாலும் தேர்தல் முடிந்தபின் வன்செயல்கள் தூக்கலாமென்று அஞ்சப்படுகின்றது. நாட்டில் அரசியல் தலைவர்களிடையிலோ, மக்களிடையிலோ ஒற்றுமை இல்லை.

புதிய தேர்தல் நடைபெற்றாலும் தங்களுக்கு விமோசனம் கிடைக்கமுடியுமா? தாங்களும் இந்நாட்டில் சரிநிகர் சமானமாக வாழமுடியுமா? பெரும்பான்மை சமூகத்தவர் மனம்மாறி தங்களுக்கு நீதிநியாயம் வழங்குவார்களா? அல்லது பிரிந்துதான் செல்லவேண்டுமா? பிரிந்து செல்லவாவது விடுவார்களா? இராணுவபலம் அவர்களிடம் இருப்பதால், சிறுபான்மை சமூகத்தவர் என்றென்றும் உரிமையின்றி அடிமைகளாக அடங்கிக்கிடக்க வேண்டியது தானா? என்று மனம் புழுங்கி செல்லும் வகை அறியாது திகைக்கின்றார்கள். இதற்கிடையே தமிழர்களிடையே ஒற்றுமையுமில்லாமல் அவர்கள் நிலைமேலும் பலவீனமாகி நம்பிக்கைக்கு இடமில்லாமலுள்ளது.

இதேசமயம் பெரும்பான்மை சமூகத்தவரிடையிலும் ஒற்றுமை இல்லை. அவர்களும் பல பல கட்சிகளாகப் பிரிந்துள்ளனர். தமிழரின் நியாயமான உரிமைகளை மறுத்துள்ளதாலேயே அவர்கள் பிரிந்துசெல்ல நினைப்பதாகவும், நாட்டில் ஒற்றுமை இல்லாததால், அமைதியின்றியும் நாடு முன்னேற முடியாமலும் இருப்பதாகவும், நாட்டின் பிரச்சினைகள் தீருவதற்குப் பதில் அதிகரித்து சிக்கலாகி வருவதாகவும் நாட்டின் நன்மையை முன்னிட்டாவது, தமிழருக்கு நீதிவழங்கவேண்டியதவசியமென்றும், பெரும்பான்மை சமூகத்திலும் சிறப்பாக வாலிபர்கள் உணர்ந்து வருகின்றனர்.

இந்தியா, பாகிஸ்தான் இவ்விருநாடுகளிலும் கூட வாலிபர்கள் தங்கள்பிரச்சினைகள் தீரவழிகாணமுடியாமல் திகைக்கிறார்கள். நாடு விடுதலை அடைந்தும் 'ஜனநாயக' தேர்தல்கள் நடந்தும் தங்கள் விமோசனத்துக்கு வழிகாண முடியாமல் பலாத்கார வன்முறை புரட்சிகளை நடத்தவே தயாராகிவிடுகிறார்கள். இலங்கையிலுள்ள தமிழ் வாலிபர்கள் மட்டுமல்ல சிங்களவாலிபர்களின் மனநிலையும் இப்படித்தான்.

சிறப்பாகததமிழர் பிரச்சினையை அவசரமானதாகக் கருதி அதற்கு முதலிடம் தந்து புதிய அரசாங்கம் தீர்க்க நடவடிக்கை எடுக்காவிடில், எவ்வளவு தேர்தல்கள் நடத்தினாலும் அதனால் பயனுண்டா?

## ''தமிழ்ஈழம் காண்பதற்கு நேரம் இதுவல்ல''

மட்டுவில், புதன்

''தமிழ்ஈழம் காண்பதற்கு நேரம் இதுவல்ல'' என்று சாவகச்சேரி தொகுதியில் ஜி. ஜி. காங்கிரஸ் சார்பில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. வி. குமாரசுவாமி கூறினார்.

திரு. ஆ. தில்லைநாதன் தலைமையில் இப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. குமாரசாமி தொடர்ந்து கூறியதாவது:-

''தமிழ் ஈழம் காண்பதற்கு இதுவல்ல நேரம். மக்கள் பசியால் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் இன்று தமிழினம் உண்மையை உணர்ந்து விட்டது.

''சிங்கள அரசிடம் எதையும் நாம் தந்திரமாகப் பெற முடியும் அந்தத் தந்திரம் எனக்கு கைவந்த கலை. இதைப் பிறரால் சாதிக்க முடியாது. எனது சமயோசித புத்தியால் நான்கையாண்ட தந்திரத்தால், எமது மத்தியில் இதுவரை யாரும் சாதிக்க முடியாதவற்றை நான் எம். பியாக இருந்த காலத்தில் சாதித்துள்ளேன்''. (உ)

## விபுலானந்த சுவாமிகளின் பல்துறைப் பணிகள்

— ச. அம்பிகைபாகன்

விபுலானந்த சுவாமிகளை நினைக்கும்போது எமது மனக்கண் முதல் தோன்றுவது அவர் பெற்றிருந்த நிறை கல்வியே. சுவாமிகள் ஆங்கிலக் கல்லூரியிற் படித்தகாலத்திலும் ஆசிரியப் பயிற்சி பெற்ற போதும், விஞ்ஞானத்துறையில் 'டிப்ளோமா' பயிற்சி பெற்றபோதும், தமிழைப் பிரத்தியேகமாகக் கற்றுவந்தார். ஆசிரியப்பயிற்சி பெற்ற காலத்தில் அக்கல்லூரியில் விரிவுரையாளராகவிருந்த தென்கோவை கந்தையாபிள்ளையிடம் சிவகசிந்தாமணி முதலிய நூல்களைக்கற்றார். கொழும்பு விவேகானந்த சபையோடு தொடர்பு கொண்டு சபையின் முக்கிய அங்கத்தவர்களாக விளங்கிய சிற்கைலாசபிள்ளை, முதலியார் தாமோதரம்பிள்ளை முதலியோரிடம் சிலப்பதிகாரம் முதலிய நூல்களைப் பாடங் கேட்டார். இப்படித் தமிழைப் பிரத்தியேகமாகப் படித்து வந்ததனாலேயே 1916ஆம் ஆண்டில் விஞ்ஞான டிப்ளோமா பரீட்சையோடு மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையிலும் சித்தியெய்தினார். இலங்கையிலிருந்து முதன் முதல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையில் சித்தியெய்தியவர் இவரே. தமிழ்ப்பாஷையைச் செவ்வனே கற்றுக்கொண்டதோடு ஆங்கிலத்தையும் திறம்படக்கற்றுக் கொண்டார். இவற்றோடு லத்தின் பாஷையையும் ஓரளவு கற்றுக்கொண்டார். சுவாமிகள் ஒரு விஞ்ஞான பட்டதாரியாயிருந்த போதிலும், தமிழ், ஆங்கிலம், சரித்திரம், தத்துவ சாத்திரம் முதலியவற்றில் பாண்டித்தியம் பெற்றிருந்தது அவருக்கு ஒரு தனிச்சிறப்பைக் கொடுத்தது. இவ்வாறு விஞ்ஞானம், கலை ஆகிய இரு துறைகளிலும் பயிற்சி பெற்று நிறைவான கல்வி உடையவராய்ச் சுவாமிகள் விளங்கினார். இப்படி இவர்கள் பெற்ற கல்வி பின்னர் இவர் செய்த நாடகத் தமிழ்ஆராய்ச்சிக்கும் இசைத் தமிழ் ஆராய்ச்சிக்கும் பேருதவியாகவிருந்தது.

சுவாமிகள் நிறைவான கல்வி பெற்றிருந்ததனாலேயே கல்லூரி அதிபராயிருக்கும்படியும், நூல்களைப் பதிப்பிக்கும்படியும் உயர்தர சஞ்சிகைககளை நடத்தும்படியும், சர்வகலாசாலைகளில் பேராசிரியராகவிருக்கும் படியும்அழைக்கப்பட்டனர்.

### கல்லூரி அதிபர்

சுவாமிகள் முதன் முதலில் அதிபராயிருந்தது மானிப்பாய் இந்துக்கல்லூரியில், அப்பொழுது அவர் பண்டித மயில்வாகன பீ. எஸ். ஸி. இவ்விடத்தில் அதிபராயிருந்ததோடு விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இப்படி விஞ்ஞான பாடத்தைப்போதிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போதிலும் எப்பாடத்தையும் கற்பிற்கும் ஆற்றல் உடையராய் இருந்தார் இதுபற்றி அவருடையய வரலாற்று நூல் ஒன்றில் விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றது.

இக்காலத்தில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்துச் சங்கத்தைப் பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயருக்கு உறுதுணையாயிருந்து தாபித்து அதன் அங்கத்தவராகி அது நடாத்திவந்த பிரவேச, பாலபண்டித, பண்டித பரீட்சைகளைச் செவ்வனே நடாத்துவதற்குப் பேருதவி புரிந்தார்.

துறவியான பின்னர், சிற்சில காலம் திருக்கோணமலை இந்துக்கல்லூரியிலும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் அதிபராகவிருந்தார் இக்காலங்களில் மாணவர்களைத் தமது போதனு திறமையினுற் கல்வித்துறையில் மேலோங்கச் செய்தார். மாணவர்களை மாத்திரமல்லாமல் ஆசிரியர்களையும் கல்வி வளர்ச்சியில் ஈடுபாடுகொள்ளச் செய்தார்.

### நூல் பதிப்பித்தல்

யாழ்ப்பாணத்திற் சுவாமிகள் ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்த காலத்திற் பல தமிழ்ப்புலவர்களுடன் நட்புப்பூண்டிருந்தார். அவர்களுள் ஒருவர் நவநீதகிருஷ்ணபாரதியார் என்பவர். அக்காலத்தில் செய்யுள் நடையில் 'உலகியல்விளக்கம்' என்னும் ஒருநூலை யாத்தார். அது அறநெறியியல், பொருள்நெறியியல், இன்பநெறியியல் என மூன்று பகுதிகளையுடையது. பாரதியாரின் வேண்டுகோளின்படி இந்நூலைப் பதிப்பித்தார். இதற்குத் தமிழிற் பதிகமும் கடவுள் வாழ்த்தும் ஆங்கிலத்தில் விமரிசனமும் சுவாமிகள் எழுதினார். இதோடு சில பாக்களை ஆங்கிலத்தில் செய்யுள் நடையில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலின்கண் சுவாமிகள் எழுதியிருப்பதை அவர்களின் தமிழ் ஆங்கில புலமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

### பத்திரிகைத் தொண்டு

1922-ம் ஆண்டிற் சுவாமிகள் இராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சென்னை மயிலாப்பூரில் பயிற்சி பெறத் தொடங்கினர். இம்மடத்திலே தங்கிய மூன்ருண்டுகள் சுவாகளின் வாழ்க்கையின் ஒரு பொற்காலமாகும். இதுவே சுவாமிகளின் ஒரு பிரதான ஆக்கவேலைக் காலமாகத் திகழ்கின்றது இங்கிருந்த போது, இராமகிருஷ்ண சங்கத்தார் சென்னையிலிருந்து வெளியிடும் வேதாந்தகேசரி இராமகிருஷ்ணவிஜயம் 'என்னும் இரு சஞ்சிகைகளுக்கும் ஆசிரியரானர் சுவாமிகள் இராமகிருஷ்ண விஜயத்தில் எழுதிய முக்கிய கட்டுரைகளை விபுலானந்த வெள்ளம் என்னும் நூலில் திரு. அருள் செல்வநாயகம் வெளியிட்டுள்ளார். இவற்றுள் அறத்துப்பாலாராய்ச்சி, 'பாவலர்விருந்து' 'தமிழ் மொழியில் தற்கால நிலைமையும் தமிழரின் கடமையும்' என்பவை விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை. அறத்துப்பாலாராய்ச்சியிலே திருக்குறள் கருத்துக்கள் வைதிக நெறிக்கு மாறுனவையல்ல என்பதைப் பல ஆதாரங்கள் காட்டி விளக்கியுள்ளார்.

சர்வகலாசாலைகளிற் கொடுக்கப்படும் கல்வி உன்னத

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

சுவாமி விபுலானந்தரின் திருவுருவப்படம் யாழ் வளாகத்தில் இன்று திரைநீக்கம் செய்யப்படப்போவதாக அறிந்ததும், மனதுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

நமது பெரியோர்களைசிலகாலத்துக்குள் மறந்துவிடுகிறோம். சிறப்பாக மாணவர்கள் அவர்களை மறக்காமலிருக்கச்செய்ய பாடப்புத்தகங்களில் நம் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு, சேவைகள், கருத்துக்கள் முதலியவற்றை வெளியிடுவதுடன், அவர்களது படங்களையும் காட்சிக்கு வைத்து தினசரி நினைவுகூருவது பயனுள்ளதாக இருக்கும்.

அவரது பெயரைக் கேட்டதுமே எனக்கு அவரது புகழ் பெற்ற ஒரு பாடல் நினைவுக்கு வரும். அடிக்கடி என் வாய் அப்பாடலை முணுமுணுக்கும்.

''வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ,
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளை மலருமல்ல
வேறெந்தப் பூவுமல்ல
உள்ளக்கமலமடி
உத்தமனர் வேண்டுவது''

தமது உள்ளத்தை இறைவனுக்கே அர்ப்பணித்த ஓர் உத்தமர்தான் இதைப் பாடியிருக்கமுடியும்.

இப்பாடலை அவரது திருவுருவப்படத்தின் அடியில் பொறித்து வைப்பது, மாணவருக்கு நல்லுபதேசமாக இருந்து உய்ய வழிகாட்டுவதாக இருக்கும்.

ஃ ஃ ஃ

நமது உள்ளத்தில் சாதாரணமாக இருப்பது நமது அகந்தையும் பற்றுதல்களுமே. ''நான், எனது'' என்பதை விட்டு, நம் உள்ளக் கமலத்தை இறைவனுக்கு அளிக்கவேண்டுமென்று உபதேசிக்கிறார் அடிகளார்.

வெறும் உபதேசத்துடன் அவர் இராமல், ஒரு துறவியாகி, தம் உடல் பொருள்ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார். சாதாரண துறவிகள் போலல்லாமல், இந்தியாவிலும், இலங்கையிலும் இரு பல்கலைக்கழகங்களின் மூலம் தமிழுக்கும் இசைக்கலைக்கும் தொண்டாற்றி பெரும் புகழ் பெற்றார்.

அவரது வாழ்க்கையே நமக்கு ஒரு மேலான உபதேசம். வெறும் புஷ்பங்களையும், இலைகளையும் பறித்து பூசை செய்வதை விட, உதட்டளவில் மந்திரங்களைச் சொல்லுவதைவிட, நம் உள்ளத்தை இறைவனுக்கு ஒப்புவிப்போமாயின், அதனல் இறைவனின் அருள்கிடைக்கவும் நல்ல பலன்களை நாம் பெறவும் முடிவதாக இருக்கும்.

ஃ ஃ ஃ

இந்தியாவின் புதிய ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட இருக்கும் நீலம் சஞ்சீவ ரெட்டிக்கு வயது 64.

ஒருமனதாகத் தம்மை இந்திய ஜனதிபதியாகத் தெரிவு செய்ய இருப்பதை அறிந்ததும், முதல் வேலையாக அவர் என்ன செய்தார் தெரியுமா? ஆந்திர பீரதேசத்தில் அனந்தபூரிலுள்ள தமது வயோதிக அன்னையாரை வணங்கி அவரது நல்லாசியைப் பெறச் சென்றுள்ளார். அவர் காட்டியுள்ள முன்மாதிரி நமக்கும் நமது மாணவர்களுக்கும் நல்ல வழிகாட்டியாக இருக்கவேண்டும். 64 வயதில் அன்னையிடம் எவ்வளவு பக்தி! அன்னையின் ஆசியைப் பெற்றவருக்கு எவ்வளவு பெரிய பதவி!

ஃ ஃ ஃ

சமீபத்தில் கொழும்பிலே குடியேற்ற காரியாலயத்திற்குச் சென்றிருந்தேன். தற்செயலாகக் கனடா தேசத்தவர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் இந்தியாவில் சில வாரங்கள்

(4-ம் கலம் பார்க்க

(5ம் கலத் தொடர்ச்சி)

இருந்துவிட்டு இங்கு வந்தவராம். இந்திராவின் தோல்வியைக் கேட்டு மிகவும் ஏமாற்றமடைந்திருந்தார். ''இருபது 'ட்ருடு' க்களை (கனடிய பிரதமர்) கொடுத்து ஒரு இந்திராவை மாற்றிக்கொள்ள நாங்கள் தயார்'' அவர் கூறியதைக் கேட்டதும் வியப்படைந்தேன். இந்தியாவிலுள்ளதைவிட வெளிநாடுகளில் இந்திராவுக்கு அதிக செல்வாக்கு இருக்கிறதுபோலும்.

இந்தியாவில் பல மாகாணங்களிலும் வன்செயல்களும், பல பல இடங்களில் வேலைநிறுத்தங்களும், கீரோக்களும் நடைபெறுவதுடன், விலைவாசிகளும அதிகரித்துவருவதைப் பார்க்கையில், பிரதமர் தேசாய் என்ன நினைக்கிறரோ!

# "ஜி.ஜி. - செல்வா இணைந்தது தமிழர் விடிவுக்காகவே"

— சாவகச்சேரி 'நவம்'

கொடிகாமம், புதன்

"தமிழர் விடுதலைக் கூட்டணி சாதாரண ஒரு அரசியல் கட்சிஅல்ல. தமிழர் விடிவுக்காக உருவாக்கப்பட்ட கொள்கைப் பிடிப்புள்ளவர்கள் அங்கம் வகிக்கும் விடுதலை இயக்கம் அது" என்று உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. இராசலிங்கம் சாவகச்சேரித் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. வி. என். நவரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டம் சரசாலை வடக்கில் திரு. கே. பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது.

'தமிழர்க்குள் சிறுபான்மையினர் என்று எவரும் இருக்கக் கூடாது என்ற உயர்ந்த நோக்கத்துடன் தான் உடுப்பிட்டித் தொகுதியை கூட்டணி தந்துள்ளது' என்று அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில், "தமிழினம் இந்நாட்டில் பிளவுபடாது ஒற்றுமையுடன் விடுதலைபெற வேண்டும் என்பதற்காகவே அமரர்கள் ஜி. ஜியும் செல்வாவும் இணைந்தார்கள். இந்த ஒற்றுமையை நாம் தொடர்ந்தும் காக்க வேண்டும்" என்றார். [உ]



வேலர்: கொந்துருத்துக்கு கல்லுப்பிரட்டுற சின்னையர் இப்போ என்ன செய்யுறார்?

மயிலர்; இப்போ அவர் செய்யுற கொந்துருத்துல பொல்லால் அடிச்ச காசு. வோட் பிரட்டுற கொந்துருத்து எடுத்திருக்கிறார்.

— சுந்தர்

# "தமிழீழ அரசில் வர்க்கபேதம் இராது"

— இராசலிங்கம்

சங்கானை, புதன்

"அமையப்போகும் தமிழ் ஈழத்தில் ஆண்டான் அடிமை என்ற வர்க்கபேதம் இருக்கக் கூடாது, இருக்கவும் முடியாது. இந்த அடிப்படையிலேயே தமிழர் விடுதலைக்கூட்டணி தேர்தலில் போட்டியிடுகின்றது. இதைச் சார்ந்தே அமையவுள்ள தமிழ் அரசியல் யாப்பில் சமத்துவ சோஷலிச அடிப்படையிலான சட்டங்கள் வகுக்கப்படும். சிங்கள ஆட்சிக்காலத்தில் சிறிதளவு உரிமையேனும் தமக்குக் கிடைக்காது என்று கண்ட பின்பே நாம் பிரிந்து வாழ வேண்டுமென்று தீர்மானித்தோம். தமிழர்களாகிய எம்மிடையே வேற்றுமையில்லை. ஆனால் சிலர் எம்மிடையே வேற்றுமை உண்டுபண்ண முயற்சிக்கிறார்கள். இதற்கு நாம் பலியாகக்கூடாது. தமிழ் ஈழம் ஒன்றே எமக்கு வாழ்வளிக்கும்."

தமிழர் விடுதலைக்கூட்டணி உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளர் திரு. த. இராசலிங்கம் சங்கானை சந்தை மைதானத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசுவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. சி. வைரமுத்து தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. இராசலிங்கம் மேலும் பேசியதாவது:

'தமிழர்களுக்கிடையே உள்ள பேதம் பிரிவினைகளை மறந்து தமிழர்கள் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது. சோஷலிச அடிப்படையில் ஓர் இனத்தின் மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவை காக்கப்படல் வேண்டும். நாடு சுதந்திரம் பெற்றபின் மாறி மாறி ஆட்சி நடாத்திய அரசாங்கங்கள் எமது உரிமைகளை தர மறுத்ததுமல்லாமல் சிங்களவர் ஆளும் இனமாகவும் தமிழர் ஆளப்படும் இனமாகவும் ஆக்கி அடிமைப்படுத்தினர். 1972ன் பின்புதிய அரசியல்அமைப்பில் எம்மைப் புறக்கணித்தனர். இவைகளை தமிழ்த் தலைவர்கள் சுட்டிக் காட்டியும் ஆட்சியாளர் செவிசாய்க்காமையால் எமது பிரதேசம் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றை கட்டிக் காக்க எடுத்துக்கொண்ட தீர்ப்பே வட்டுக்கோட்டை மகாநாட்டுத் தீர்ப்பாகும்.

"இந்த அடிப்படையிலேயே பிரிவினையை முன்வைத்து நடக்கவுள்ள தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாகக் கணித்து மக்கள் முன்வந்துள்ளோம்.

"இந்த நிலையில்தான் ஆட்சியாளர்கள் கண்திறந்து எம்தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையும் முடிவுருமல்போனது. இந்த நிலையில் இனியும் அரசை நம்பினுல் நாம் ஏமாற்றம் அடைவதுடன் எமது இனமும் தமிழ் பிரதேசங்களும் அழிந்து ஒழிந்துவிடும்."

வட்டுக்கோட்டைத் தொகுதி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில், "அமையப்போகும்தமிழ் ஈழத்தில் சாதி, மத பேதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இதனை செய்கை மூலம் காட்டி வைப்போம் என்பதை திட்டவட்டமாகக் கூறிவைக்கின்றேன். முதல்முறையாக தேசியப்பேரவைக்கு ஒரு சிறுபான்மை [illegible] னத்தவரை அனுப்பிவைப்பது தமிழர் விடுதலைக்கூட்டணியே" என்றார். (உ)

## 'ஜனநாயகப்பண்பு வேண்டும்'

— ராஜராஜேஸ்வரன்

யாழ்ப்பாணம், வியாழன்

அரசியல் கட்சிகள் ஜனநாயகப் பண்பைக்காக்க வேண்டும். வரம்புமீறிய வன்செயல்கள் பலவீனத்தின் அறிகுறியே என்று நல்லூர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜா திருநெல்வேலி வளாகத்தருகில் நடைபெற்ற தமது பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"ஆதாரங்கள் எதுவும் இன்றி துரோகி' என்று ஒருவர் மீது வசைமாரி பொழிவதில் அர்த்தமில்லை என்றும், அவர் கூறினார். (உ

# பிரதமர் மொழிப்பிரச்னைக்கு எவ்வாறு தீர்வு காண்பார்

மட்டக்களப்பு, புதன்.

"சிங்கள மக்களுக்கு 1970 தேர்தலின்போது இரண்டு கொத்து அரிசியை கொடுத்து திருப்திசெய்ய முடியாத திருமதி பண்டாரநாயக்கா தமிழர்களின் ஜீவாதாரப் பிரச்னையாகிய மொழிச் சிக்கலுக்கு தீர்வுகாண முடியுமா?"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. காசிஆனந்தனை ஆதரித்துமட்டு நகர்பாட்டாளிபுர மைதானத்தில்நடைபெற்றதேர்தல்பிரசாரக் கூட்டத்தில் திரு. ம. க. அந்தனிசில் கூறினார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பிறந்து வாழாத கல்வி அமைச்சர் கலாநிதி பதியுதீன் தேர்தலுக்காக இங்கு வந்து விட்டு தனிநாடு கொடுக்க முடியாதென்று கூறுவதற்கு என்ன உரிமையுண்டு எனவும் அவர் கேட்டார்.

ஓய்வுபெற்ற நிருவாக சபை அதிகாரி திரு. டி. ஜே. பி. ஜெகநாயகம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. அந்தனிசில் தொடர்ந்து கூறியதாவது:

உலகில் உள்ள ஐந்து கண்டங்களும் ஒரே கண்டத்திட்டு என்பதால் ஒருமொழி மட்டும் ஆட்சிமொழியாக இல்லை. சகல கண்டங்களிலும் பிராந்திய மொழிகள் ஆட்சி மொழியாகவும், போதனு மொழியாகவும் இருந்து வருகின்றன. ரஷ்யா அமெரிக்கநாடுகளில் பிராந்திய மொழிகளில் கல்வி பயின்று உலகசாதனை நிலை நாட்டப்படுகின்றது.

தேர்தலுக்காக மட்டுமிங்கே வந்த கல்வி அமைச்சர் தமிழர்கள் மத்தியிலே வகுப்புவாதம் பேசி வருகிறார். சிங்களவர் மத்தியில் வகுப்புவாதம் பேசுவதற்கு முதுகெலும்பு இல்லாதவர் தமிழீழத்தில் வகுப்புவாதம் பேசுவதற்கு என்ன அருகதை உண்டு.

1934ம் ஆண்டு சிங்கள-முஸ்லீம் கலவரம் நடைபெற்றபோது தலைமறைவாகியிருந்து பதவியைக் காப்பாற்றுவதற்காக வாய்பேசாமல் இருந்தவர் புத்தளத்தில் முஸ்லீம்கள் படுகொலைசெய்ய பட்டபோதிலும் மௌனம் சாதித்தவர் முஸ்லீம்களின் சார்பில் உரிமைக்குரல் ,எழுப்புவதற்கு என்ன தகுதி உண்டு. இந்த நாட்டிலே தமிழ்பேசும் இனத்துக்கு இன்னல்கள் வந்த பொழுது குரல் கொடுத்த ஒரே தலைவன் தந்தைசெல்வா அவர்களே.

தமிழர்கள் உயிரோடு வாழ முடியாத இன்றைய நெருக்கடியான சூழ் நிலையில் நாம் விழிப்போடும், உணர்வோடும் செயலாற்ற வேண்டும். தமிழாராய்ச்சி மாநாட்டில் இறந்தவர்களுக்கு நினைவுத் தூண்கள் எழுப்பப்பட்டனவாயினும் சிங்கள ஏகாதிபத்தியம் அவற்றை மண்ணுக்கி இந்நாட்டில் தமிழன் உரிமையோடும் மட்டுமல்ல உயிராகவும் கற்றூணகவும் இருக்க முடியாதென்பதை காட்டிவிட்டது. நாடு பிரிக்கப்பட்டால் பொருளாதாரம் எங்கிருந்து

(7-ம் பக்கம் பார்க்க)

# "இளைஞர்கள் அமைதி காத்திடல்வேண்டும்"

— யோகேஸ்

யாழ்ப்பாணம், வியா

"ஆத்திரமூட்டும் சம்பவங்கள் எதிரணியால் தூண்டப்பட்டாலும் கூட அகிம்சை வழியில் தமிழ் இளைஞர்கள் அமைதி வழி நடத்தலவேண்டும்".

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி விடுதலைக் கூட்டணி அபேட்சகர் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் தம்மை ஆதரித்து, அடைக்கல மாதா கோவிலுக்கு எதிரிலுள்ள முன்றலில் நிகழ்ந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது; "இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பெருமளவில் பெண்கள் கலந்து கொள்வது தாய்க்குலத்தின் எழுச்சியை எடுத்துக்காட்டுகிறது. எந்த ஒரு நாட்டிலும் தாய்க்குலம் சுதந்திர உணர்வு பெற்றுவிட்டால் அந்த இனம் விரைந்து சுதந்திரம் பெறுவது உலகவரலாறு. எனவே ஈழத் தமிழகம் விடுதலை பெறும் காலம் நெருங்கிவிட்டது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

"இம்முறை இத்தொகுதியில் நான் பல்லாயிரக் கணக்கான வாக்குகளால் வெற்றி பெறுவேன் என்பதை இங்கு கூடி இருக்கும் பெருந்தொகையான தாய்மார் இப்பொழுதே எடுத்துக் காட்டிவிட்டனர்.

"இந்நேரத்தில் வெற்றியை நோக்கி நாம் வீறுநடை இடுவதைக் கண்டு எதிரணியினர் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இறங்கினுலும் தமிழ்இளைஞர்கள் அகிம்சை வழியில் நடந்து அமைதியைக் காத்திடல் வேண்டும். எதிரணியினருக்கு இடையூருகநடந்துகொள்ளவும் கூடாது".

இக்கூட்டத்தில்திரு. வண்ணை ஆனந்தன் பேசுகையில், "தமிழ்மக்கள் பிரதேச - மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் ஒன்றுபட்டு நிற்கின்றனர். இவ்வொற்றுமையை எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் எடுத்துக் காட்டவேண்டும். அதற்கு ஒரேவழி, தமிழர் கூட்டணி அபேட்சகர்களை ஆதரிப்பது ஒன்றே" என்றார். மற்றும் பலரும் பேசினர். (கி)

## "வெறும் உணர்ச்சி பயன்தராது"

— கே.ரி.ஆர்

உடுப்பிட்டி, புதன்

"தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டே நான் இத்தேர்தலில் போட்டியிடுகிறேன் வெறும் உணர்சிகளை மட்டும் அடிப்படையாகக் சியம்" என்று பருத்தித்துறைத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. கே. ரி. இராசசிங்கம் குடத்தனையில் திரு. பி. நடராஜ சுந்தரம் தலைமையில் நடைபெற்றதேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"அரசியல் ரீதியில் திட்டமிடப்பட்ட கொள்கைகளை மக்கள் முன்வைத்தே தேர்தலில் போட்டியிடவேண்டும். வெறும் உணர்ச்சிகள் ஒரு அரசியல் கட்சியின் இலட்சியமாக இருக்கக் கூடாது" என்று தொடர்ந்து பேசுகையில் கூறினார். (உ)

# "தொழிலாளர் ஒற்றுமையை குலைப்பது அசாத்தியம்"

யாழ்ப்பாணம், வியா.

மானிப்பாய்த் தொகுதியில் இந்தமுறை தேர்தலில் 12000 தொழிலாளர்களும் ஒன்றுபட்டு விட்டனர். இந்த ஒற்றுமையைப் பிரிக்க சிலர் பலவித தந்திரோபாயங்களை கையாளுகின்றனர். எனினும் இவை வீணை பிரயத்தங்களேயாகும். இந்தத் தேர்தலின் பின்பு சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தை மூடுவதாகச் சொல்பவர்கள் தொழிலாளர் விரோதிகளாகவே கணிக்கப் படுவார்கள்"

இவ்வாறு மானிப்பாய்த் தொகுதி சுயேச்சை வேட்பாளரும் ஜி. ஜி. காங்கிரஸ் உறுப்பினருமாகிய திரு. சி. பொ. வ. ம. க. முதலியார் தம்மை ஆதரித்து இணுவில் கந்தசாமி கோயிலடியில் திரு. சு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தனிநாட்டுப் போராட்டத்தை இரண்டு வழிகளில் காணலாம். ஒன்று போராட்டம் மூலம், மற்றது பேச்சுவார்த்தை மூலம். பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதென்றால் பெரும்பான்மைக் கட்சிகளாக ஸ்ரீ. ல. சு. கட்சியுடனும், ஐ. தே. கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்க்கலாம்.

'18 வருடகாலமாக எங்கள் தொகுதி எந்தவித முன்னேற்றமும் அடையவில்லை. 30 ஆயிரம் படித்த வாலிபர்களும் வனிதையர்களும் எங்கள் தொகுதியில் வேலையின்றி உள்ளார்கள். இவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

திருவாளர்கள், எஸ். எஸ், சுந்தரம், பொ. செல்லத்துரை உட்படப் பலரும் உரையாற்றினர். (கூ-உ)

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ.இல. | தொகுதி | | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | | ............ |
| 80. | வட்டுக்கோட்டை | | ............ |
| 81. | காங்கேசன்துறை | | ............ |
| 82. | மானிப்பாய் | | ............ |
| 83. | கோப்பாய் | | ............ |
| 84. | உடுப்பிட்டி | | ............ |
| 85. | பருத்தித்துறை | | ............ |
| 86. | சாவகச்சேரி | | ............ |
| 87. | நல்லூர் | | ............ |
| 88. | யாழ்ப்பாணம் | | ............ |
| 89. | கிளிநொச்சி | | ............ |
| 90. | மன்னார் | | ............ |
| 91. | முல்லைத்தீவு | | ............ |
| 92. | வவுனியா | | ............ |
| 94. | திருகோணமலை | | ............ |
| 95. | மூதூர் | | ............ |
| 96. | கல்குடா | | ............ |
| 97. | மட்டக்களப்பு | (1) | ............ |
| | | (2) | ............ |
| 98. | பட்டிருப்பு | | ............ |
| 100. | சம்மாந்துறை | | ............ |
| 101. | கல்முனை | | ............ |
| 102. | பொத்துவில் | (1) | ............ |
| | | (2) | ............ |
| 103. | புத்தளம் | | ............ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ......... | ......... | ......... |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ......... | ......... | ......... |

(4) மேறகூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ......... | ......... | ......... |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |
| 85 | பருத்தித்துறை | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ............ ரூபா ............ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி" நிபந்தனைகளுக்கும் அதன்நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும்கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ............

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத்தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக்குகள்= அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977.

---

யாழ். லயன் கிளப் நடாத்தும்

# தமிழ், ஆங்கில நாடகபோட்டி

யாழ்ப்பாணம், வியாழன் நாடக உத்திகளைப் புதிதாக கண்டும், அபிவிருத்தி செய்வதற்கும்; அவற்றை எழுதித் தயாரித்து ஊக்குவிப்பதற்கும், தொடர்ச்சியான ரசனையை உண்டாக்குவதற்கும், யாழ். லயன்ஸ் கழகம், யாழ். மாவட்ட தமிழ், ஆங்கில நாடகப் போட்டிகளை நடத்த விருக்கிறது

இந்நாடகப் போட்டிகள் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகள், தனிப்பட்ட மன்றங்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், வளாகம் ஆகியவற்றிற்கிடையே நடாத்தப்படும். பாடசாலைகளுக்கிடையேயுள்ள போட்டி புறம்பாகவும், ஏனையவற்றிற்குரிய போட்டி புறம்பாகவும் நடாத்தப்படும்.

நாடகப் போட்டிக்குரிய விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ம் தேதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் நாடகங்கள்

போட்டிக்கான நாடகங்களைத் தெரிந்து மேடையேற்றுதல் புதிதாக நாடகமொன்றினை எழுதித் தயாரித்து மேடையேற்றுதல் என்று இந் நாடகங்கள் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் இவ்விரு வகையான நாடகங்களையும் மேடையேற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனல் மன்றங்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள், வளாகம் ஆகியவற்றிற்கிடையிலான போட்டியில், இரண்டாவதுவகையான நாடகங்கள்மட்டுமே மேடையேற்ற அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடகம் முன்னர் எப்போட்டியிலும் பரிசு பெறுததாயிருக்கவேண்டுமென்றும், அவ்வாறு பரிசு பெறவில்லையென ஒவ்வொரு விண்ணப்பதாரரும், அதற்குரிய பத்திரத்தை பூரணப்படுத்தி அத்தாட்சி அளிக்கவேண்டும்.

கால் இறுதி, அரை இறுதிப் போட்டிகள், ஒவ்வொரு உதவி அரசாங்க பிரிவு அடிப்படையில் நடைபெறும் இறுதிப் போட்டி செப்டம்பர் 30 ம் தேதிக்குமுன் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கால், அரை இறுதிப்போட்டிகளில் மேடையமைப்பு, ஒப்பனை ஆகியன கவனிக்கப்படமாட்டாது.

ஒவ்வொரு நாடகங்களும், 45 நிமிடம் தொடக்கம் ஒரு மணித்தியாலத்திற்கு மேற்படாமல் அமையவேண்டும். மேடை ஒழுங்குகள், உடைமாற்றல் யாவும் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளேயே நடைபெறவேண்டும். ஒரு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட மேடையேற்றப்படும் நாடகங்கள் போட்டியிலிருந்து நீக்கப்படும்.

போட்டிக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு நாடகத்திற்கும் 15 ரூபா அனுமதிக் கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தை லயன் எஸ். செபஸ்தியாம்பிள்ளை, சமுத்திரா ட்ரேட்ஸ் லிமிட்டெட், 23/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நாடகமொன்றினை எழுதித் தயாரிக்க விரும்பியவர்கள் அந்நாடக பிரதி ஒன்றினை விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டுமென்றும், பிரசுரிக்கப்பட்ட நாடகமாகவிருந்தால், அந்நாடகத்தின் பெயரைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளுக்கு யாழ். லயன்ஸ் கழகத்தினரால் நியமிக்கப்படும் நடுவர்களது தீர்ப்பே இறுதியானதாகும்.

### ஆங்கில நாடகங்கள்

ஆங்கில நாடகங்கள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவு பாடசாலைகளுக்குமட்டும். இரண்டாம் பிரிவு தனிப்பட்ட மன்றங்கள் ,ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகள், வளாகம், கழகங்கள் ஆகியவற்றிற்கு.

ஒவ்வொரு பிரிவினருக்கும், தனித்தனியே போட்டிகள் நடைபெற்று 77 செப்டம்பர் மாதத்திற்குமுன் யாழ். நகரத்தில் மேடையேற்றப்படும்.

---

# 'இறக்குமதி அரிசி மனிதருக்கு உதவாது'

கொழும்பு, புதன்

''சந்திர மண்டலத்திலிருந்தாவது அரிசி பெற்று மக்களின் அரிசிப் பங்கீட்டை அதிகரிக்கட்போவதாகப் பிரதமர் கூறியிருக்கிறார். இறக்குமதி செய்யப்படும் அரிசி மிருகங்களுக்குத்தான் ஏற்றது. மனிதருக்கு உதவாது.''

பிரிதுவவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர் திரு. பி. சமதிரத் தின மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது; ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுடன் சேர்ந்து சுதந்திரக்கட்சி அபேட்சகர்கள் தேர்தல் பிரசாரம் செய்துவருவது வெட்கப்படக்கூடியது.

''பிரதமர் இப்படியான பிரசாரங்களின் பயனைத் தேர்தல் முடிந்தபின் அறிந்துகொள்வார்.'' (ஈ)

---

# 'நோயாளிகளின் உணவை நிறுத்தியது ஐ.தே.கட்சிதான்

முகம், புதன்

''ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில், ஆஸ்பத்திரியில் 65-ம் ஆண்டு முதல் 70-ம் ஆண்டு வரை நோயாளர்களுக்கு வழங்கப்பட்டுவந்த உணவு நிறுத்தப்பட்டது. இப்படியானவர்கள் இன்று பட்டினிபற்றிப் பேசுகின்றார்கள்''.

வத்தளைத் தொகுதியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய சுதந்திரக் கட்சி அபேட்சகர் டாக்டர் ஏ. டி. ஜே. எல். லியோ மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''கடந்தகாலத்தில் இந்நாட்டை ஆட்சிபுரிந்த ஐ. தே. கட்சி அரசாங்கம் மக்க

(7-ம் பக்கம் பார்க்க)

---

# "கிருமிநாசினி பாவனை வட பகுதியிலேயே அதிகம்"

## கருத்தரங்கில் யாழ். அரசாங்க அதிபர்

யழ்ப்பாணம், வியா,

''யாழ். மாவட்ட விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்கவே யாழ். லயன்ஸ் கிளப் விவசாயக்கருத்தரங்கை ஏற்படுத்தியுள்ளது. இதனல் விவசாயிகள் பல நன்மைகளை அடையக் கூடியதாக இருக்கின்றது'' என்று யாழ்.விவசாயப் பாடசாலையில்நடைபெற்ற லயன்ஸ் கிளப் விவசாயக் கருத்தரங்கில் கலந்துகொண்ட யாழ். அரசாங்க அதிபர் திரு. லால் விஜயபாலா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தற்போது பழைய சமுதாயம் மாறி இளைஞர்களால் புதியவொரு சமுதாயம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இன்று யாழ். விவசாயிகளுக்கு உள்ள பிரச்னை என்னவென்றல் பூச்சிநாசினி தட்டுப்பாடாகும். இத்தட்டுப்பாட்டால் தாவரங்களை அழிக்கும் பூச்சிகளை, அழிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உயிர் உள்ள பூச்சிகளினல் தாவரங்களை அழிக்கும் பூச்சிகளை அழிக்க முடியும் என்று கண்டுகொண்டோம். தாவர பங்கசுகளால் ஏற்படும் நோய்களை விட பூச்சிகளினல் ஏற்படும் நோய் மிக தாக்கத்தை ஏற்படுத்தும் கிருமிநாசினிகளை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணி கூடுதலாக வழங்க வேண்டியுள்ளது. எனவே கூடியவரை கிருமிநாசினிகள் கிடைக்க முடியாமையினல் பரந்த அளவிலான ஆராய்ச்சி செய்ய முடியாமல் இருக்கின்றது. இலங்கையில் யாழ். குடாநாட்டிலேயே கூடுதலான கிருமிநாசினிகளை உபயோகிக்கின்றனர்.

''அதிகமான விவசாயிகள் கிருமிநாசினிகளை கறுப்புச் சந்தையில் வாங்கவேண்டியதாகவுள்ளன. விநியோகத்தில் இருக்கும் பிரச்னைகளால் உண்மையான விவசாயிகளைக் கண்டுபிடிக்க முடியாமலிருக்கின்றது.

''உண்மையான விவசாயிகளுக்கு தரமான கிருமிநாசினிகள் கிடைப்பதில்லை. உண்மையான விவசாயிகளைக் கண்டுபிடிக்க பல பிரச்னைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. விவசாய விரிவாக்க நிலையம்கூட உண்மையான விவசாயிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போகிறது.'' (கு)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
SECRET AGENT OSS 117
(Clour)

REGAL (JAFFNA) Daily at 4-45, 7-00 & 9-30 p. m. only
ROBERT LOUIS STEVENSON'S CLASSIC
TREASURE IsLAND
(Color)

சாந்தி யாழ். நகர் போன்: 7642 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ரோனி ரணசிங்க, நீற்று பெணுர்ன்டோ
W. M. S. தம்புவின்
DEIYANGE DHEENDUWA
(சிங்களம்)
நல்ல தீர்ப்பு
தமிழ் ஆக்கம்

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
பூம்புகார்
15-ந் திகதி முதல் தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7693 (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி — சாவித்திரி
பத்தினித் தெய்வம்
15-7-77 முதல் ஒரு மகாராணி

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன்-சௌகார்ஜானகி
ஆலயம்
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் — லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக

ராஜா (யாழ்நகர்) போன்: 7180
68-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ராணி (யாழ்ப்பாணம்)
71-வது நாள்
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
மகத்தான 2-வது மாதம்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

## வாக்காளர்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கவேண்டும். இதுபற்றி உதவி அரசாங்க அதிபருக்கும் அறிவிக்கலாம்.

### தேர்தல் தினம் விடுமுறை

தேர்தல் தினமான ஜூலை 21ம் தேதி இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தில் அங்கம் பெறும் தனியார் நிறுவனங்களுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனங்கள் விரும்பினுல் 22-ம் தேதியும் லீவு வழங்கலாமென இலங்கைமுதலாளிமார்சம்மேளனம்சிபார்சு செய்துள்ளது.

### இருவார அரிசி

தேர்தலை முன்னிட்டு இவ்வாரம், அடுத்தவார அரிசியும் வழங்கப்படுகிறது. இம்மாதம் 18ம் தேதிவரை இருவாரஅரிசியையும் பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

### கள்ளமாக வாக்களித்தாலும்.

1970-ம் ஆண்டிற்கு முற்பட்ட தேர்தல்களில் ஒருவருடைய வாக்கைஇன்னொருவாக்காளர்அளித்துவிட்டால், உண்மையானவாக்காளர் எவ்வளவு அத்தாட்சிகளைச் சமர்ப்பித்தாலும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆனல் இம்முறை நடைபெறவிருக்கும் தேர்தலில் ஒரு புதிய வசதி செய்யப்பட்டுள்ளது. ஒரு வருடையவாக்கை இன்னொருவர் தவறுதலாகவோ அல்லது திருட்டுத்தனமாகவோ அளித்து விட்டால் அதற்கு உரிய வாக்காளர் தான் உண்மையான வாக்காளர் என்பதை தக்க ஆதாரங்களோடு நிரூபிப்பாராக இருந்தால் (அடையாள அட்டை, கூப்பன், கிராமசேவகருடைய கடிதம்) தேர்தல் அதிகாரியால் அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார். இவற்றிற்கு கொடுக்கப்படும் வாக்களிக்கும் சீட்டு நீலநிறத்தை யுடையதாக இருக்கும் இந்தமுறை கள்ளத்தனமாக வாக்களிப்பதைத் தடைசெய்யவும் வாக்களிப்பு நிலையங்களில் குழப்பமில்லாமல் அமைதியை நிலைநாட்டும் நோக்கோடும், சகலருக்கும் வாக்களிக்கச் சந்தர்ப்பம் கொடுப்பதற்கும் புகுத்தப்பட்ட முறையாகும்.

கொடி-நி

## 28 வருடங்களின் பின் மீட்பு

ஆனைக்கோட்டை, புதன்

28 வருடங்களுக்கு முன் திருட்டுப்போன சைக்கிள் ஒன்றை கோப்பாய் பொலிஸ் சார்ஜன்ட் ஐயாத்துரை கோப்பாயில் வைத்துக் கைப்பற்றியுள்ளார்.

புலன் விசாரணை தொடர்கிறது. (உ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-மஞ்சுளா
அன்பே ஆருயிரே

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
மோட்டார் சுந்தரம் பிள்ளை

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவகுமார் - ஜெயசுதா
பட்டிக்காட்டு ராஜா

# கொள்ளையனை மக்கள் சுட்டு வீழ்த்தினர்

புத்தளம், புதன்

அதிகாலை வேளை கொள்ளையில் ஈடுபட்ட நால்வரில் ஒருவர் பொதுமக்களின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி பிடிபட்டார்.

புத்தளத்தில் இச்சம்பவம் நடந்தது.

அப்புஹாமி என்பவரது வீட்டிற்குள் சம்பவதினம் அதிகாலை துப்பாக்கி, கத்தி சகிதம் புகுந்த நால்வர் அடங்கிய கோஷ்டி ஒன்று வீட்டுக்காரர்களைக் கட்டி வைத்து விட்டு 7000 ரூபா பெறுமதிமிக்க பொருட்களைக் கொள்ளையடித்துக்கொண்டு ஓடியதாம்.

வீட்டுக்காரர்கள் எழுப்பிய அபயக்குரல்கேட்டு திரண்ட பொதுமக்கள் கொள்ளையரை விரட்டிச்சென்று துப்பாக்கியால் சுட்டனர். சூடுபட்டு விழுந்த புரோகஸ் என்ற இக் கொள்ளையனை பொதுமக்கள் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

ஏனைய கொள்ளையர் மூவரும் தப்பிவிட்டனர். (உ)

## தேர்தலை முன்னிட்டு அரசு ஊழியர் லீவுகள் 18-ம் திகதி முதல் ரத்து

கொழும்பு, புதன்

பொதுத்தேர்தல் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் வகையில் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் இம்மாதம் 18-ம் திகதி முதல் தேர்தல் முடியும்வரை லீவு வழங்கப்படக்கூடாது என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சகல அமைச்சுக்களுக்கும் அமைச்சர் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபமொன்றில் இவ்வுத்தரவைப்பிறப்பித்துள்ளார்.

கூட்டுத்தாபனச்சபை ஊழியர்களும் இவ்வுத்தரவில் அடங்குவர்.

அத்தியாவசிய காரணங்கள் காட்டப்பட்டால் அரச ஊழியர்க்கு லீவு வழங்கப்படும் என்று சுற்றுநிருபத்தில் கூறப்பட்டிருக்கிறது வாக்கை ஏற்கமறுக்கும் அதிகாரிகளுக்கு 500 ரூபா அபராதம், 1மாத சிறை அல்லது இரண்டும் விதிக்கப்படும். (உ)

## வெட்டு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார். மூளாய் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் சம்பவம் நடைபெற்ற அன்று இளைஞர் பலர் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளானுர்கள், சென்ற தவணையின்போது நீதிபதி இளைஞர்களை அழைத்து இதுவரை பொலிசார் வழக்கு தாக்கல் செய்யாததால் நாம் அழைக்கும் போது நீதிமன்றம் வரவேண்டும் என்று அறிவித்திருந்தார். அதன்படி இன்று நீதிபதி எதிரிகளான இளைஞர்களை அழைத்து பொலிசார் வழக்கு தாக்கல் செய்யாததால் இளைஞர்கள் சார்பாக சட்டத்தரணி திரு அ. அமிர்தலிங்கம் ஆஜரானுர், ஒவ்வொரு தவணையின் போதும் பெருந்தொகையான மக்கள் நீதிமன்றத்தில் கூடினர். திரு. அ. அமிர்தலிங்கம் இவ்வழக்கு சம்பந்தமாக இளைஞர் சார்பாக ஆஜராக வந்த போது பெருந்தொகையான மக்கள் அவரை வரவேற்றனர். இவ்வழக்கு மல்லாகம் சங்கானை ஆகிய நீதிமன்றங்களில் நடைபெற்று வந்தது.

## பிரதமர்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் என கேட்கிறுர்கள். இலங்கை சுதந்திரம் பெற்றபொழுது பாவனைப் பொருட்களும் பொருளாதாரமும் உற்பத்தி செய்யப்பட்டனவா? (இ)

## நோயாளிகளின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் நன்மைக்காக எதையும் செய்யவில்லை. அவர்களின் ஆட்சி, முதலாளி வர்க்கத்தினருக்கே உதவியளித்துவந்தது

"சோஷலிசத்தின்எதிரியான ஐ. தே. கட்சி இன்று புதிய சோஷலிச திட்டம் பற்றிப் பிரசாரம்செய்து மக்களைக் குழப்பி வருகிறது. ஆனல் மக்களுக்கு ஐ. தே. கட்சியின் கொள்கை பற்றி நன்கு தெரியும். ஏமாறமாட்டார்கள்".

## யாழ். நகர்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ததி சுதந்திரமாக வாழவேண்டுமானல் தமிழ் ஈழம்தான் ஒரே வழியென்றும் இதை அடைவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிக்கவேண்டுமென்றும் இதன்படி யாழ்ப்பாணத்தொகுதியில் கூட்டணி வேட்பாளரான வெற்றிவேலு யோகேஸ்வரனை பெருவெற்றி பெறச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

கட்டுப்பாட்டுடன்ஒவ்வொரு பேச்சாளரும்மிகச்சுருக்கமாகத் தங்கள் பேச்சுக்களை நிகழ்த்தினர்.

பெரிய தலைவர்கள் எவரும் இல்லாமல் மாணவர்களே நடத்திய இக்கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தது. இப்படியொரு பிரம்மாண்டமான கூட்டம் நடந்தது யாழ்ப்பாணச் சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை என்றும் மக்கள் பேசிக்கொண்டனர்.

## குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

தனது வீட்டிற்கு தான் இல்லாத சமயம் கைக்குண்டுவீசப்பட்டதாக மானிப்பாய் தொகுதி சுயேட்சை வேட்பாளர் திரு. க. ந. வேலன் புகார் செய்துள்ளார்.

அரியாலை வயோதிபர் கொலை:

## மற்றொரு சந்தேக நபரும் கைது

யாழ்ப்பாணம், வியா.

அரியாலையில் முருகேசு என்ற 72 வயது வயோதிபர் ஒருவருக்கு விஷம் பருக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மற்றொரு சந்தேகநபரான கந்தசாமி என்பவர் நேற்று வல்வெட்டித்துறையில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்களில் ஒருவரான சிவலிங்கம் என்ற இளைஞர் நேற்று முன்தினம் மருதனுமடத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இக் கொலைச் சம்பவம் பற்றி பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

பொலிசார், சுமார் 5000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியையும், உருக்கப்பட்ட தங்க நகைகளையும், கைப்பற்றியுள்ளனர். (க)

## கூட்டம்

யாழ்ப்பாணம், வியா

அஞ்சல் தொலைதொடர்பு சேவையாளர் சங்க யாழ். கிளையின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 31-ம் திகதி யாழ். பிரதம தபால் அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. (உ)

ஈழநாடு
EELANADU

## விபுலானந்த—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சி அடைதற்கும் அதனுல் மக்கள் முழுப்பயன் அடைவதற்கும் அக்கல்வி தாய்மொழி மூலம் கொடுபடவேண்டும் என்பதைச் சுவாமிகள் நன்குணர்ந்திருந்தார்கள். இவ்விஷயத்தில் தமிழ்நாட்டின் நிலைபற்றிப் பின்வருமாறு கூறுகின்றுர்கள். இவ்விஷயத்தில் சென்னைச் சர்வகலாசாலையாரும் தமிழ் மக்களுமே மிகவும் பிற்பட்டு நிற்கிறுர்கள். தமிழில் மொழிபெயர்ப்பு நூல் எழுத முன்வருபவர் சிலர் நிரம்பிய தமிழறிவின்மையால் ஆங்கில மக்களும் தமிழ் மக்களும் ஒருங்கு வெறுக்கத்தக்க பவற்றுப் பச்சையரிசி நடையில் (பைந்தமிழும் வெள்ளையர் ஆங்கிலமும் சரிக்குச்சரி கலந்த நடைப்பற்றுப் பச்சரிசி நடையென்றுர். மணிப்பிரவாளமென்றுற்போல) நூலெழுதி முடிக்கின்றுர்கள். இவ்வாறெழுந்த நூல்களால் விளையும் பயன் ஒன்றுமில்லை. ஒரேவழி அயனுட்டு சொற்களை சேர்த்துக் கொள்ளுவதானுல்குற்ற முடிந்தநூல் தமிழ்மணங் கவழுவதாக இருத்தல் வேண்டும். அல்லாவிடில் நின்று நிலவாது.

மேலே கூறப்பட்ட குறைகளை நீக்கும் பொருட்டு மேற்றிசைச் செல்வம், விஞ்ஞான தீபம் என்னும் இரு நூல்களை எழுதத்தொடங்கி அத்தலைப்பில் இரண்டு கட்டுரைகளை எழுதினுர். சுவாமி அவர்களின் அறிவு ஆழ்ந்ததாயும் அகன்றதாயும் நுண்ணியதாயும்இருப்பதைஇக்கட்டுரைகள் காட்டுகின்றன.

சுவாமிகள் எழுதத் தொடங்கிய மேற்றிசைச் செல்வம் முன்னுரையோடு நின்றுவிட்டது தமிழரின் துர்ப்பாக்கியமாகும்.

### நாடகத் தமிழ்த் தொண்டு

சுவாமிகளின் நாடகத்தமிழ் இசைத்தமிழ் ஆராய்ச்சிகள் வெளிவரும் வரைக்கும் முத்தமிழ் என்பது பேச்சளவில் மாத்திரம்தான் இருந்தது. பழைய இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்களொன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. சுவாமிகள் சிலப்பதிகாரத்திலிருந்தும் அதற்கு எழுதப்பட்ட அரும் பதவுரை, அடியார்க்கு நல்லாருரை முதலியவற்றின் உதவி கொண்டும் நாடகத் தமிழ்பற்றிய விஷயங்களை அறிந்து கொண்டார். இவற்றேடு வடமொழியில் தனஞ்செயன் என்பவர் எழுதியதசரூபம் என்னும் நூலின் உதவியுடன் நாடகங்களின் இலக்கணங்களை அறிந்து கொண்டார். இவ்விலக்கணங்களெல்லாம் செகசிற்பியர் எழுதிய நாடகங்களில் அமைந்திருப்பதைக் கண்டார். இப்படிப் பெற்ற கருத்துக்களைக் கொண்டே மதங்க சூளாமணி என்னும் நூலை எழுதினுர். மதங்கர் என்றுல் கூத்தர். அவர்களில் சிறந்தவரைச் சூளாமணி எனலாம் எனக் கூறி, கூத்தரிற் சிறந்தவரான செகசிற்பியருக்கு அப் பெயரைக் கொடுத்தார். செகசிற்பியர் நாடகங்களை அடிப்படையாக வைத்து எழுதிய நூலுக்கும் மதங்க சூளாமணி என்னும் பெயரைச் சூட்டினுர்.

மதங்கசூளாமணி என்னும் நூலிற் காணப்படும் பொருள் முதலில் மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவில் மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் தலைமையிற் சொற்பொழிவாக நிகழ்த்தப்பட்டது. பலரின் வேண்டுகோளின்படி அதுசெந்தமிழிற் கட்டுரைகளாக வெளிவந்து ஈற்றில் 1926ம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. இந்நூலில் சுருக்கமாகக் கூறப்பட்ட விஷயங்களைப்பின்னர் விரித்தெழுதப்போவதாக இந்நூலின் முன்னுரையிற் கூறியுள்ளார். ஆனுல்இவ்விருப்பம் நிறைவேறவில்லை.

### மீண்டும் இலங்கையிற் கல்விப்பணி

சுவாமிகள் 1926ம் ஆண்டு சந்நியாசம் பெற்றுர். 1925ம் ஆண்டு இலங்கைக்கு வந்தார். 1925ம் ஆண்டு தொடக்கம் 1931ஆம் ஆண்டு வரைக்கும் இலங்கையில் தங்கியிருந்து இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளை நிருவகிக்கும் பணியைப் புரிந்தார். இதனுல், இவர் இதுகாறும் செய்துவந்த ஆராய்ச்சி வேலைக்குத்தடை ஏற்பட்டது. இப்படிஇத்துறையில் தடையேற்பட்ட போதிலும் இலங்கையில் சிறப்பாகக் கிழக்கிலங்கையிலேக்தீவிரமாக கல்விப்பணியில் ஈடுபட்டுத் திருக்கோணமலை இந்துக்கல்லூரி, மட்டக்களப்புசிவானந்த வித்தியாலயம் என்னும் ஆங்கிலக் கல்லூரிகளை உருப்படுத்தியதோடு, பல தமிழ்ப்பாடசாலைகளையும் விருத்தியடையச் செய்தார். இதனுற் கிழக்கிலங்கையில் பலதுறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

### தமிழ்ப்பேராசிரியர்

செட்டிநாட்டரசர் சிதம்பரத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவி அங்குதமிழுக்குப் பேராசிரியரை நியமிக்க நிச்சயித்தார். இப்பதவிக்குச் சுவாமிகளே பல்லாற்றுனும் தகுதிவாய்ந்தவரென உணர்ந்து சுவாமிகளை அப்பதவியை, ஏற்கும்படி அழைத்தார். சுவாமிகளும் இராமகிருஷ்ண சங்கத்தின் அனுமதிபெற்று அப்பதவியை ஏற்றுர். இது தமிழைப் பொறுத்தவரை ஒரு புதுச் சகாப்தத்தை ஏற்படுத்தியது. இதற்கு முன் தமிழ்,சர்வகலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஒட்டுக் குடி வாழ்க்கை நடத்தியது. சமஸ்கிருதப் பேராசியர்க்குக் கீழ் தமிழ்ப் பண்டிதர்கள் கடமையாற்றினர். தமிழைச் சிறப்புப் பாடமாக (பீ.ஏ.சிறப்பு) கற்பதற்கு ஒரிடத்திலும் ஏற்பாடு செய்யப்படவில்லை. அண்ணுமலையிற் பேராசிரியர் பதவி ஏற்பட்டதும் சென்னைச் சர்வகலாசாலையிலும் இராசதானி கல்லூரி போன்ற கல்லூரிகளிலும் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இதன்பின்பு தமிழில் விமரிசன நூல்கள் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் தமிழ்மொழி சம்பந்தமான நூல்கள் பெருந்தொகையாக வெளிவரத் தொடங்கின.

1963ம் ஆண்டில் சுவாமிகள் பேராசிரியர் பதவியைத் துறந்து மறுபடியும் இலங்கையிலுள்ள இராமகிருஷ்ண சங்கத்தின் கீழுள்ள பாடசாலைகளை நிருவகிக்கும் பொறுப்பை ஏற்றுர். இப்படியிருந்தும் தமிழ்நாட்டோரும் அங்குள்ள பல்கலைக்கழகங்களோடும் தொடர்பை நீக்கவில்லை. 1934ம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழாவுக்குத் தலைமை தாங்கினுர். இது தொடக்கம் இச்சங்கத்தோடும் இதன் தலைவர் திரு. உமாமகேசுவரம்பிள்ளை அவர்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டார். இச்சங்கத்தின் சஞ்சிகையான தமிழ்ப்பொழில்மூலம் இசைத்தமிழ் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து வெளியிட்டுவந்தார். இச்சங்கமே பின்னர் யாழ். நூலை வெளியிட்டது.

### இலங்கைச் சர்வகலாசாலைப் பேராசிரியர்

இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரி 1922ம் ஆண்டில் தாபிக்கப்பட்டபோது, சேர். அருணுசலம் முதலியோர் சுவாமிகளை அங்கு விரிவுரையாளராகவிருக்கும்படி கேட்டார்கள். ஆனுல் அப்போது பிரமச்சாரி விரதம் பூண்டு துறவியாவதற்குப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபடியால் அவர்களின் அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 1943ம் ஆண்டில் இலங்கைச் சர்வகலாசாலை தாபிக்கப்பட்டதும் சுவாமிகளை அங்கு பேராசிரியராக இருக்கும்படி கேட்டார்கள். இவர்களின் அழைப்பை மறுக்க அஞ்சி அப்பதவியை ஏற்றுர். இதனுலே தமிழ்மொழியின் நிலை இலங்கைச் சர்வகலாசாலையிலும் வெளியிலும் உயர்ந்தது.

### யாழ். நூல் அரங்கேற்றம்

சுவாமிகள் இலங்கையிற் பேராசிரியராக இருக்கும்போது, கரந்தைத் தமிழ்ச்சங்கம் மூலம் யாழ்.நூல் அச்சாகி வந்தது. 1947ம்ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி திருக்கொள்ளம்புத்தூரில் பல பெருமக்கள் மத்தியில் யாழ்நூல் அரங்கேற்றம் நடைபெற்றது.

யாழ் நூல் அரங்கேற்றத்தோடு சுவாமிகளின் இவ்வுலகப் பணிகள் நிறைவேறின. யாழ். நூலே சுவாமிகள் தமிழ் மக்களுக்குக் கொடுத்த சிறந்த கொடையாகும். அதன்மூலம் அவர்கள் புகழ் என்றும் நின்று நிலவும். (அ)

பாண்டிச்சேரியில்

## சபாநாயகராக எம். ஜி. ஆர். கட்சிக் காந்தி தெரிவு

பாண்டிச்சேரி, ஜூலை 13

பாண்டுச்சேரி சட்டசபையின் சபாநாயகராக அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர்தெரிவில்ஜனதா கட்சியைச்சேர்ந்த வரதப்பிள்ளையும் திரு. காந்தியும்போட்டியிட்டனர்.

ஏழுவாக்குகள் வித்தியாசத்தில் திரு. காந்தி வெற்றிபெற்றுர்.

சபாநாயகராகத்தெரிவுசெய்யப்பட்ட திரு. காந்தியை பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு. இராமசாமியும் ஜனதாக் கட்சி உறுப்பினர் திரு. அன்ஸாரி துரைசுவாமியும் சபாநாயகர் இருக்கைக்கு அழைத்துச்சென்றனர்.

சபாநாயகர் தெரிவிக்கு முன்னதாக உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் இடம் பெற்றது.

### தமிழ்நாடு

இது இவ்வாறிருக்க தமிழ்நாட்டில் ராஜ்யசபாவின் 6 ஸ்தானங்களுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதற்குரிய இறுதித்தினம் இன்றுகும்.

அ.இ.அ.தி.மு.க வைச் சேர்ந்த ஏ. பி, ஜனுர்தனம் கிருஷ்ணன் ஆகியோர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். (உ)

### வேட்பாளர்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

னர் தமிழ்நாடு அமைக்க கம்யூனிஸ்ட்கட்சி உதவும் என்று த. வி, கூட்டணியினர் சொல்லிவருகின்றுர்கள். ஆனுல் த. வி. கூட்டணிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இருந்த தொடர்பு திரு. வி.பொன்னம்பலம் வாயிலாகவே இருந்தது. அவர் இன்று கட்சியில் இருந்து விலக்கப்பட்டு விட்டார். கம்யூனிஸ்ட் கட்சியும் பிரதேச சுயாட்சிக்குத்தான் ஆதரவளிக்குமேயல்லாமல் தனிநாட்டுக்கல்ல.''

இக்கூட்டத்திற்கு திரு. செ. கதிரவேல் தலைமை வகித்தார்.

திரு. எஸ். சொல்வேந்தன், ஆர். ஆனந்தராசா உட்படப் பலர் உரையாற்றினர். (கூ-அ)

## தேர்தலைப் பகிஷ்கரித்து தமிழ்ஈழப் போராட்டம்
### சுயேச்சைகள் சார்பில் அழைப்பு விடுகிறுர் ராஜசிங்கம்

உடுப்பிட்டி, புதன்

இத்தேர்தலிலே 24 கூட்டணி வேட்பாளர்களை எதிர்த்து 56 சுயேச்சை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைகளைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதும் அதே நேரத்தில் அவர்களின் செய்கையைத் தமிழ் மக்கள் சந்தேகக் கண் கொண்டே அணுகுகின்றனர் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது'' என்று பருத்தித்துறைத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. கே. ரி. இராசசிங்கம் வெற்றிலைக்கேணிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது கூறினுர்.

இக்கூட்டம் திரு. செபமாலை இராயப்பு தலைமையில் நடைபெற்றது.

திரு. கே. ரி. இராசசிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது:

''1931-ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலை வடபகுதித் தமிழர் எவ்வாறு பகிஷ்கரித்தனரோ, அதே போல எதிர்வரும் 21-ந் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலையும் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்கள் யாவரும் பகிஷ்கரிக்கவேண்டும். இரு மாகாணங்களிலும் இதனை நடைமுறைப்படுத்துவது சாத்தியப்படாதுவிடில் வடமாகாணத்திலாவது இதனைச்செய்வோம்

''இம்மாதம் 21 ம் திகதி தமிழ்ஈழம் அமைக்கும் செயல் திலமாகப் பிரகடனப்படுத்தி விட்டு எமதுபோராட்டத்தை ஆரம்பிப்போம். இதற்குத்தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தயங்கினுல் சுயேச்சை வேட்பாளர்களாகிய நாமே இந்த நாட்டிலே வாழும் தமிழ்இளைஞர்களின் உதவியுடன் போராட்ட அணிக்குத்தலைமை வகித்துச் செல்லத் தயாராக உள்ளோம்.

''தமிழர்விடுதலைக்கூட்டணியிலுள்ள சட்டத்தரணிகள், சட்டமேதைகள்எமக்குஆலோசனை வழங்கிவழிநடத்தட்டும். இந்தப்போராட்டத் திட்டத்தைத் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் ஏற்றுக்கொள்வார்களா? எமது உடலிலே கடைசித் துளி இரத்தம் இருக்கும்வரையும் நாம் இந்தப் போராட்டத்தை வழிநடாத்தத் தயாராக உள்ளோம். இந்தப் போராட்டத்தை நடாத்தி இழந்த தாயகத்தை மீட்போம்.

''தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடம் தனித்தமிழ் ஈழம் காண்பதுதான் அவர்களுடைய உண்மையான இலட்சியமாக இருந்தால் எமது இந்தக்கருத்தை உத்தியோகபூர்வமாக வெளியிடட்டும்.'' (அ)

## சர்வோதய இயக்கம் கட்சிச் சார்பற்றது
### தலைவர் ஆரியரத்தின அறிக்கை

யாழ்ப்பாணம், வியா.

சர்வோதய இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாகும். எந்தக் கட்சியுடனும் இதற்கு தொடர்பு கிடையாது. கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஒரு பக்க சார்பற்ற இயக்கமாக இயங்கிவருகிறது.

இலங்கை சர்வோதய இயக்க தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன, வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, புதியதொரு மனித சமுதாயத்தையும், புதிய உலகையும், உருவாக்கும் பணியில், ஆத்மீக கலாச்சார அடிப்படையில் இயங்கும், நாம் கட்சித் தொடர்புகளுக்கு அப்பால் செயலாற்ற வேண்டும். ஆதலால், யாராவது எங்களுக்கு கட்சிகளுடன் தொடர்பு இருப்பதாக கூறினுல் அது உண்மையாக இருக்காது.

எந்த சர்வோதய தொண்டனுவது, எந்த இடத்திலாவது, எந்த விதமான கட்சி அரசியல் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டால், அது இயக்க சட்டதிட்டங்களுக்கு எதிரானதாகும். இப்படியானவர்களை சர்வோதய தொண்டராக கணிக்க வேண்டாமென்றும் பொது மக்களுக்குவேண்டுகோள் விடுகிறேம்.

நாங்கள் எந்தப் பக்கமும் சாராமல் பணியாற்றி வந்தோம். கடந்த 20 வருடகாலமாக, ஆட்சியிலிருக்கும் அரசுக்கு, இயன்றளவு ஒத்துழைப்பு வழங்கிவந்துள்ளோம் எதிர்காலத்திலும் நாம் இந்தக் கொள்கையையே பின்பற்றி வருவோம்.

தேர்தல் காலத்தில் மக்கள் முன்னேற்றத்திற்குப் அமைதியை நிலைநாட்டுவதற்கும் மக்களை ஊக்கப்படுத்துமாறு நாம் சர்வோதய தொண்டர்களை கேட்டுக் கொள்கிறேம்.

## சஞ்சீவரெட்டி வேட்புமனு தாக்கல்

புதுடில்லி, புதன்

இந்திய ஜனுதிபதி பதவிக்கு நடைபெறும் தேர்தலில் போட்டியிட லோகசபை சபாநாயகர் திரு. நிலம் சஞ்சீவரெட்டியின் வேட்புமனு இன்று தாக்கல்செய்யப்பட்டது. இவரது வேட்புமனுவை 15 பேர் முன்மொழிந்துள்ளனர். பிரதம மந்திரி மற்றும் ஏழுமந்திரிகளும், எதிர்க்கட்சித் தலைவர் சவானும், மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் இதில் கைச்சாத்திட்டுள்ளனர் 12பேர் வழிமொழிந்துள்ளனர் முஸ்லிம் லீக், அ. இ. அ. தி. மு. க. தலைவர்களும் இதில் கையெழுத்திட்டுள்ளனர்.

திரு. சஞ்சீவரெட்டி சபாநாயகர் பதவியை ராஜினுமா செய்துவிட்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தொபனத்தாரால் யாழ்ப்பாணம் வென்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna: Telegram Eelanaadu Telephone 389; Registered as News papers in Sri Lanka: